பக்கங்கள்: 16
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 சித்திரை 07 வெள்ளிக்கிழமை 20.04.2018 கதிர் 165

## மே முதலாம் திகதி விடுமுறை இல்லை

மே முதலாம் திகதி அறிவிக்கப்பட்டிருந்த அரசாங்க, வங்கி விடுமுறை இம்முறை ரத்து செய்யப்பட்டுள்ளது.

வெசாக்காலத்தை ஒட்டி மே தினத்தை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு அரசு ஒத்தி வைத்தமையின் காரணமாகவே மே முதலாம் திகதி அறிவிக்கப்பட்டிருந்த விடுமுறைகள் ரத்தாகின்றன. மே ஏழாம் திகதி இந்த விடுமுறைகள் நடைமுறைப்படுத்தப்படும். (உ)

# விக்கியின் அரசியல் கூட்டில் மக்கள் முன்னணியும் சேரும்!

## பச்சைக் கொடி காட்டுகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்





யாழ்ப்பாணம், ஏப்ரல் 20

தமிழ் மக்கள் பேரவையிலுள்ள பொது அமைப்புக்களுடன் இணைந்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூட்டு ஒன்றை உருவாக்கினால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அதில் இணைந்து கொள்கின் றமையைச் சாதகமாகப் பரிசீலிக்கும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

பக்கம் 14 »

## ஹொரணையில் ஐவர் நச்சு வாயுக்குப் பலி!

### இறப்பர் தொழிற்சாலையில் அனர்த்தம்



கொழும்பு, ஏப்.20

ஹொரணை – பெல்லப்பிட் டிய பிரதேசத்தில் உள்ள இறப்பர் தொழிற்சாலையில் நேற்று மதியம் 1.20 மணியளவில் ஏற்பட்ட திடீர் அனர்த்தத்தில்

பக்கம் 14 »

## கூட்டமைப்பின் மே தினம் இம்முறை முழங்காவிலில்



கிளிநொச்சி, ஏப்.20

இரணைதீவு மக்களின் வாழ்வுரிமை, தொழிலுரிமையை வலியுறுத்தியும், வலிந்து காணாமல் ஆக் கப்பட்டோருக்கான நீதியை வற்புறுத்தியும் தமிழ்த் தேசியக்

பக்கம் 14 »

## மைத்திரியைச் சந்திக்க டிலான் அவசரமாக லண்டன் பயணம்

கொழும்பு, ஏப்.20

சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கும் சுதந்திரக் கட்சியின் 16 எம். பிக்களின் நிலைப்பாடு குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து நேரடியாக விளக்குவதற்காக அந்த 16 பேரில் அடங்கி

பக்கம் 03 »

## சு.கவை விட்டுப் பிரிந்துசென்ற 16 பேருக்கும் பெரமுன தஞ்சம்

கொழும்பு, ஏப்.20

தேசிய அரசிலிருந்து விலகிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஏற்றுக் கொள்வதாக முன்னாள் ஜனாதிபதி

பக்கம் 14 »

## எரிபொருள் விலையை உயர்த்துவதா? முடிவு ஜனாதிபதி, பிரதமர் கைகளில்!



கொழும்பு, ஏப். 20

எரிபொருள்விலையை உயர்த்துவதா, இல்லையா என்பது தொடர்பான இறுதி முடிவை ஜனாதிபதி மற்றும்பிரதமரேஎடுப்பார்கள் எனப் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

தமிழ், சிங்கள புத்தாண்டை

பக்கம் 14 »

## மாகாணச் செயலாளர்கள் மாற்றம்;

## வடக்கு ஆளுநர் குரேயுடன் பதில் முதலமைச்சர் முரண்!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.20

வடக்குமாகாணஅமைச்சுக்களின் செயலாளர்களை நியமிப்பதில் வடக்குப் பதில் முதலமைச்சர் கலாநிதி க. சர்வேஸ்வரனுக்கும் மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரேக்கும் இடையே

பக்கம் 14 »

## யாழ்ப்பாணம் பல்கலையில் அன்னை பூபதி நினைவேந்தல்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.20

தியாகதீபம் அன்னை பூபதியின் நினைவேந் தல் நிகழ்வு நேற்றுத் தமிழ்தாயகமெங்கும் கடைப் பிடிக்கப்பட்டது. யாழ்ப் பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்களால்

பக்கம் 14 »

## ஆதரவு கேட்டது கூட்டமைப்பு ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன

### ஈ.பி.டி.பி. நேற்று அதிரடி அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.20

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியிடம் ஆதரவு கோரித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொலைபேசி ஊடாக பேசியமைக்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. தேவை எனில் அவற்றை

பக்கம் 14 »




## இனி அது ரகசியம் அல்ல!

இலங்கை அரசியல் நிலைவரங்களை தமிழக ஊடகங்கள் மிகவும் உன்னிப்பாக – நுணுக்கமாக – நோட்டமிடுகின்றன என்பது தெளிவு.

'ஸாம்பிளுக்கு' நேற்றைய சம்பவம் ஒன்றைத் தொட்டுச் செல்ல விரும்புகிறேன்.

தமிழகம் சென்றிருக்கும் வடக்கு மாகாண முத

பக்கம் 03 »

# இலங்கை கடற்படைக்கு இந்திய ஆழ்கடல் ரோந்துக் கப்பல்




கொழும்பு, ஏப். 20

இலங்கைக் கடற்படைக்காக இந்தியாவில் கட்டப்பட்ட இரண்டாவது ஆழ்கடல் ரோந்துக் கப்பல் கொழும்பு துறைமுகத்தில் அதிகாரபூர்வமாக கடற்படையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளது.

பி-624 தொடர் இலக்கம் இடப்பட்டுள்ள இந்தப் போர்க் கப்பலுக்கு எஸ்.எல்.என்.எஸ் சிந்துரால என்று பெயரிடப்பட்டுள்ளது.

கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்ட இந்தப் போர்க் கப்பல் அண்மையில் இலங்கைக் கடற்படையிடம் கையளிக்கப்பட்டு, கொழும்பு துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில், இந்தப் போர்க்கப்பல் இலங்கைக் கடற்படையில் அதிகாரபூர்வமாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் இந்தியக் கடற்படையின் துணைத் தளபதி வைஸ் அட்மிரல் அஜித் குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

1995 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் நாள், திருகோணமலை கடற்படைத் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிறிலங்காக் கடற்படையின் ரணசுறு, சூரய ஆகிய அதிவேக பீரங்கிப் படகுகளை கடற்கரும்புலிகள் மூழ்கடித்திருந்தனர்.

இந்த தாக்குதலுடன் தான், சந்திரிகா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் தவிர்ப்பு உடன்பாடு முடிவுக்கு வந்ததுடன், மூன்றாம் கட்ட ஈழப்போர் வெடித்தது.

இரண்டு பீரங்கிப் படகுகளை இழந்த – மூன்றாம் கட்ட ஈழப் போர் வெடித்த – அதே நாளான நேற்று இலங்கைக் கடற்படை தனது புதிய போர்க் கப்பலுக்கான ஆணையை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

## க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தி பெற்றோருக்கு புலமைப்பரிசில்!

கொழும்பு, ஏப். 20

தமது அங்கத்தவர்களின் பிள்ளைகளில் க.பொ.த உயர்தர பரீட்சையில் சித்தி பெற்ற பிள்ளைகளுக்கு 12 ஆயிரம் ரூபா பெறுமதியான புலமைப்பரிசிலை வழங்க ஊழியர் நம்பிக்கை நிதியம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த புலமைப்பரிசில் தொகையைப் பெறுவதற்காக மூவாயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர் என நிதியத்தின் பிரதி பொது முகாமையாளர் வசந்த திஸாநாயக்க குறிப்பிட்டார்.

இது குறித்து நிதியத்தின் பிரதி பொதுமுகாமையாளர் மேலும் தெரிவிக்கையில்–

விண்ணப்பங்கள் கணினி மயப்படுத்தப்பட்டு வருகின்றன. விண்ணப்பங்களை ஏற்பதற்கான கால எல்லை முடிவடைந்துள்ளது. எனினும், இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் விரைவாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இம்முறை ஐயாயிரம் பேருக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை திருமலையில் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 20

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகளை அரச சேவையில் பயிலுநர்களாக இரண்டு வருடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.



இந்த நேர்முகப் பரீட்சை 19,20, 21,23 மற்றும் 24 ஆம் திகதிகள் வரை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது என திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கே.அருந்தவராஜா தெரிவித்தார்.

முதல்கட்டமாக 1417 விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

நேர்முகப் பரீட்சைக்காக 05 சபைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன எனவும் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## வலி.வடக்கில் அழிக்கப்படும் ராணுவத்தின் ஆயுதக்கிடங்கு



தெல்லிப்பழை, ஏப். 20

வலிகாமம் வடக்கில் இருந்து விடுவிக்கப்பட்ட காணிகளில் மயிலிட்டி வடக்கில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ ஆயுத கிடங்கு மற்றும் அதனுடன் இணைந்த கட்டடங்கள் இராணுவத்தினரால் இடித்து அழிக்கப்படுகின்றன.

அங்கு பொருத்தப்பட்ட கூரையின் இரும்புக் கேடர்களை இராணுவத்தினர் அகற்றி வருகின்றனர். அத்துடன், ஆயுதக் கிடங்கைச் சுற்றிவர உயரமாக அமைக்கப்பட்டிருந்த மண் அணைகளும் அகற்றப்படுகின்றன.

மயிலிட்டி மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டாம் அங்கு இராணுவத்தினரின் ஆயுதக் களஞ்சியம் உள்ளது என்று தேசிய போர் வீரர்கள் முன்னணி அமைப்பு 2016 இல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியிருந்தது.

எனினும் இதனை ஜனாதிபதி மறுத்தமையுடன் மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## புத்தாண்டு காலத்தில் 400 கோடி ரூபா வருமானம் பெற்றது சதொச நிறுவனம்

கொழும்பு, ஏப். 20

தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் லக் சதொச நிறுவனம் 400 கோடி ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது என வணிக, கைத்தொழில் அமைச்சின் பணிப்பாளர் திருமதி இந்திக்கா ரணதுங்க தெரிவித்தார்.

இது புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் நிறுவனம் ஈட்டிய ஆகக் கூடுதலான வருமானம் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் சதொச கிளைகள் மூலம் 40 சதவீத விலைக்கழிவு வழங்கப்பட்டது.

இது வாடிக்கையாளர்களை கவர்ந்திழுக்க வழி வகுத்தது. பண்டிகைக் காலத்தில் சதொச விற்பனை கிளைகள் முழுமையாக கூடுதலான நேரம் திறந்து வைக்கப்பட்டன.

நேற்று வரை வாடிக்கையாளர்களிடம் இருந்து எதுவித முறைப்பாடும் கிடைக்கவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்தியக் கடற்படைத் துணைத் தளபதி இலங்கைக்கு நான்கு நாள்கள் விஜயம்

கொழும்பு, ஏப்.20

இந்தியக் கடற்படைத் துணைத் தளபதி வைஸ் அட்மிரல் அஜித் குமார் இலங்கைக்கு நான்கு நாள்கள் அதிகாரபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளார்.

வைஸ் அட்மிரல் அஜித் குமாருக்கு நேற்றுமுன்தினம் இலங்கைக் கடற்படைத் தலைமையகத்தில் அணி வகுப்பு மரியாதையுடன் கூடிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதையடுத்து, இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்கவைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

பரஸ்பர நலன்களுடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்தும், மூலோபாய கடற்படை ஒத்துழைப்புக் குறித்தும் இந்தப் பேச்சுக்களில் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தியக் கடற்படைத் துணைத் தளபதி வைஸ் அட்மிரல் அஜித் குமார் இன்று தமது இலங்கை விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பவுள்ளார்.



## இலங்கையில் நேரடி முதலீடுகளை மேற்கொள்வதற்கு பிரிட்டன் தயார்

கொழும்பு, ஏப். 20

இலங்கையில் கூடுதலான நேரடி முதலீடுகளை மேற்கொள்ள தமது நாடு தயாராக இருக்கிறது எனப் பிரிட்டனின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான அமைச்சர் லியாம் பொக்ஸ் தெரிவித்துள்ளார்.

இதற்கான வேலைத்திட்டம் எதிர்காலத்தில் அமுலாக்கப்படும் என பொக்ஸ் குறிப்பிட்டார்.

பொதுநலவாய இராஜ்ய தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான சந்திப்பில் அவர் கருத்து வெளியிட்டார்.

இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் இருதரப்பு வர்த்தக உறவுகளை மேன்மேலும் வலுப்படுத்துவது பற்றி ஆராயப்பட்டது. இலங்கையில் நிலவும் முதலீட்டு வாய்ப்புக்கள் பற்றிய தகவல்களை பிரிட்டனின் சர்வதேசவர்த்தக அலுவல்களுக்கான அமைச்சின் இணையத்தில் சேர்க்கப் போகிறோம் என்றும் அமைச்சர் லியாம் பொக்ஸ் குறிப்பிட்டார்.



இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கருத்து வெளியிடுகையில்–

இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகள் கணிசமான வளர்ச்சியை பதிவு செய்துள்ளதாகக் குறிப்பிட்டார். மேலும், சர்வதேச அரங்கில் பிரிட்டன் வழங்கும் ஒத்துழைப்பை ஜனாதிபதி பாராட்டியுள்ளார்.

# பொய்யை நிறுத்தவில்லையெனில் உண்மையை வெளியிட நேரிடும்!

## துமிந்த திஸாநாயக்க எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.20

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்த தீர்மானங்கள் சம்பந்தமாக எவராவது பொய்யான கருத்துக்களை வெளியிட்டு வருவார்கள் என்றால், தான் உட்படக் கட்சியின் தலைவர்களின் மூடப்பட்டுள்ள வாய்களைத் திறக்க நேரிடும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

விவசாய அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது கூறிய பொய்யான கருத்துக்களை மீண்டும் கூறிக்கொண்டு சிலர் நாடு முழுவதும் செல்கின்றனர்.

அவர்கள் இவ்வாறு தொடர்ந்தும் செயற்படுவார்கள் எனில் உண்மையில் என்ன நடந்தது என்பதை நாட்டுக்குத் தெளிவுபடுத்த நேரிடும் .



அரசில் இருந்து விலகியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த 16 பேரைக் காப்பாற்றவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 25 பேர் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த சிறிய அணியினர் அரசில் கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.

அரசை முன்னெடுத்துச் செல்ல மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமில்லை. அரசு சிறந்த யோசனைகளை கொண்டு வரும்போது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும்.

அத்துடன் என்னை ஐக்கிய தேசியக்கட்சியை நோக்கித் தள்ள சிலர் முயற்சித்து வருகின்றனர். நானோ, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மஹிந்த அமரவீரவோ எந்தச் சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையப் போவதில்லை.

என் மீது குற்றம் சுமத்தும் நபர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கத்துவத்தை பெற்றுக் கொண்டவர்கள். - என்றார். (ஐ)

# யானையின் சடலம் கிரானில் மீட்பு



கிரான் வன ஜீவராசிகள் பிரதேசத்தில் நேற்று முன்தினம் காட்டு யானை ஒன்றின் சடலத்தை தாம் மீட்டுள்ளனர் என வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காட்டு யானையொன்று அந்தக் கிராமத்தில் மரமணடைந்த நிலையில் காணப்பட்டதையடுத்து கிராம மக்கள் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளனர்.

அதனடிப்படையில் அங்கு சென்று யானையின் சடலத்தை மீட்டுள்ளமையுடன் இந்த யானை எவ்விதம் மரணித்தது என்கின்ற விசாரணைகளையும் தாம் ஆரம்பித்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# பொலிஸ் - ராணுவ சார்ஜன்ட்டுகள் விபத்தில் நேருக்கு நேர் மோதிப் பலி!

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இராணுவ சார்ஜன்ட் ஒருவரும், பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் உயிரிழந்துள்ளனர் எனக் கொஸ்வத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போத்தலேகம - மீகஹாவெல சந்தியில் நேற்று மாலை இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

மீகஹகியுல பிரதேசத்தை சேர்ந்த ஜே.ஏ.சோமரத்ன என்ற பொலிஸ் சார்ஜன்ட்டும், கொஸ்வத்தை யக்தெஸ்ஸாவ பிரதேசத்தை சேர்ந்த பிரதீப் அருணசாந்த என்ற இராணுவ சார்ஜன்ட்டுமே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த இவர்கள் மாரவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் குறித்து கொஸ்வத்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தொண்டர் ஆசிரியர்களுக்கு கிளிநொச்சியில் சந்திப்பு

கிளிநொச்சி, ஏப்.20

தகுதி இருந்தும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாத கிளிநொச்சி மாவட்டத்தொண்டர் ஆசிரியர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் வழங்குவதற்காக தற்போது நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு உரிய தகுதி இருந்தும் பலர் அழைக்கப்படவில்லை. எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனத்தை வலியுறுத்துவது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் கிளிநொச்சியில் உள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு அலுவலகமான அறிவகத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு வரும் தொண்டர் ஆசிரியர்கள் தமது ஆவணங்களையும் தம்முடன் எடுத்து வருமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

உரிய தகுதி இருந்தும் நிரந்தர நியமனத்திற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாத கிளிநொச்சி மாவட்டத் தொண்டர் ஆசிரியர்களை உரிய தினத்தில் ஆவணங்களுடன் தவறாது கலந்துகொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அறிவித்துள்ளார்.

# போதை மருந்துகளுடன் இருவர் தம்புத்தேகம பகுதியில் கைது!

தம்புத்தேகம ஏப்.20

போதை ஏற்படுவதற்காக இளைஞர்கள் பயன்படுத்தும் 600 போதை மருந்துகளை வைத்திருந்த இருவர் நேற்று இராணி சந்தியில் கைது செய்யப்பட்டனர் என தம்புத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கெக்கிராவை மற்றும் பதுளை பகுதிகளை சேர்ந்த 27 மற்றும் 33 வயதுடைய நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இரு சந்தேக நபர்களும் இராணி சந்தியில் தற்காலிக கடை ஒன்றில் ஆடை தைப்பு தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நபர்கள் தையல் தொழிலுக்கு மேலதிகமாக போதைப்பொருள்களை தூர பகுதிகளிலிருந்து கொண்டு வந்து இளைஞர்களுக்கு விற்பனை செய்கின்றனர் எனப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்து மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இதயத்தை மாற்றிய பெண் நல்ல தேகாரோக்கியத்துடன்

அனுராதபுரம் ஏப்.20

இலங்கையில் முதல் முறையாக இதய மாற்று சிகிச்சை செய்துகொண்ட பெண் ஆரோக்கியமாக இருக்கின்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிகிச்சைகள் மேற்கொண்ட பெண் 10 மாதங்களின் பின்னர் தற்போது வீடு திரும்பியுள்ளார்.

கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றவர் பின்னர் அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்நிலையில் புத்தாண்டை கொண்டாடுவதற்காக அவர் தமது வீட்டிற்குச் சென்று குடும்பத்துடன் இணைந்துள்ளார்.

அவர் வழமை போன்று செயற்பட்டு வருகிறார் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

## மைத்திரியைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ள டிலான் பெரேராவும் மற்றொருவரும் நேற்று அவசர அவசரமாக லண்டனுக்குப் பறந்தனர் என அறியவந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸநாயக்காவையும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் அமைச்சர் மஹிந்த சமரவீரவையும் அந்தச் செயலாளர் பொறுப்புகளில் இருந்து நீக்க வேண்டும் என்பதை சு.க. மற்றும் பொ.ஐ.மு. தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரடியாக – காலதாமதமின்றி – வலியுறுத்துவதற்காகவே டிலான் பெரேரா குழு லண்டன் விரைகின்றது எனக் கூறப்பட்டது.

பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது அதனை ஆதரித்து வாக்களித்த 6 அமைச்சர்கள், பிரதி சபாநாயகர் உட்பட 16 எம்.பிக்களும் அரசிலிருந்து வெளியேறி எதிரணித் தரப்பில் அமரும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து தெற்கில் கட்டவிழும் அரசியல் விவகாரங்கள் சு.கவுக்குள் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளன என்று கூறப்படுகின்றது.

இதனையடுத்தே டிலான் பெரேரா குழு லண்டன் விரைகின்றது.

தற்போது லண்டன் சென்றிருக்கும் ஜனாதிபதி நாடு திரும்புவதற்கு சில நாள்கள் செல்லும் என்று கூறப்படுகின்றது. அதற்கிடையில் அவசரமாக அவரைச் சந்தித்து சில விடயங்களை விளக்கி, தீர்மானங்களை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டமையை அடுத்தே, 16 எம்.பிக்களின் சார்பிலும் டிலான் குழு லண்டன் விரைகின்றது என்று கூறப் பட்டது. (உ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனைக் கலைத்துப் பிடித்து நேர்காணல் பெறுவதற்கு தமிழகத்தின் பல சஞ்சிகைகள் முட்டி மோதிக் கொண்டிருக்கின்றன. முதல்வரோ ஏன் வீண் சிக்கல் என்று கருதியோ என்னவோ அவர்களுக்கு எல்லாம் ‘டிமிக்கி’ கொடுத்துத் தவிர்த்து வருகின்றார்.

ஆனால், முன்னணி சஞ்சிகையான வார இதழ் ஒன்று தன் செல்வாக்கைப் பிரயோகித்து அவரை ஒருவாறு மடக்கி வழிக்குக் கொண்டு வந்து விட்டது என்று தகவல். அதுவல்ல விடயம்.

அந்த நேர்காணலில் அந்த வார இதழ் ரிப்போட்டர் எழுப்பிய கேள்விதான் விவகாரம். பல கேள்விகள் எழுப்பப்பட்டன என்று தெரிகின்றது. அவற்றில் ஒரு கேள்வி இது:-

*“நீங்கள் வடமாகாண முதலமைச்சராகச் சுயமாகவே செயற்பட்டீர்கள். ஒருவேளை ரணிலின் ஆதரவாளரான மாவை சேனாதிராசா வெற்றி பெற்றால் அது சிங்களக் கைக்கூலி (மாகாண) அரசாகத்தானே அமையும்? அதனைத் தடுக்க என்ன செய்வீர்கள்?”*

– இதுதான் கேள்வி. ஒரே கேள்விக்குள் பல விடயங்களைப் புகுத்தி எழுப்பப்பட்டிருக்கும் தந்திரோபாயப் புதிர் இது என நான் நினைக்கிறேன்.

இப்படி ஒரு கேள்வியை இங்கிருக்கும் பத்திரிகையாளர்களான நாங்கள் கேட்கமுடியாது. விடயம் அறிந்தவர்களும் அறியாதவர்களும் போல – அப்பாவித்தனப் பாணியில் – இப்படி ஒரு கேள்வியைத் தமிழக ஊடகவியலாளர் ஒருவர் கேட்கலாம். அவர்களின் தார தம்மியம் அத்தகையது என்று கணிப்பதைத் தவிர நமது அரசியல்வாதிகளுக்கு வேறு மார்க்கமில்லை.

சரி. இந்தக் கேள்விக்கு முதல்வர் விக்னேஸ்வரன் அளித்த பதில் என்ன?

அதை நான் வெளிப்படுத்துவது அந்த வார இதழின் தனித்துவ உரிமையில் தலையிடுவதாக அமைந்துவிடும். அதனால் அதனைத் தவிர்த்து விடுகிறேன்.

முதல்வர் அளித்த பதிலை அந்த இதழ் எப்படிக் கையாண்டது என்பதை அறிய அந்த இதழ் வெளியாகும் வரைப் பொறுத்திருப்பதைத் தவிர எமக்கும் வேறு மார்க்கமில்லைத்தான்.

- மின்னல் -

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## உள்ளூராட்சி நிர்வாகங்களின் சீத்துவம் இனி அம்பலமாகும்

மழை விட்டும் தூவானம் விடாதமை போல உள்ளூராட்சித் தேர்தல் முடிந்தும் அதன் அதிர்வுகளாக சபைகளின் தலைவர், உதவித் தலைவர் தெரிவுகளும் நிர்வாகிகள் தேர்வும் தொடர்ந்தன.

தேர்தல் முடிந்து சுமார் இரண்டரை மாதங்கள் கடந்த நிலையில் அந்த நிர்வாகிகள் தேர்வுத் திருவிழாவும் பெரும்பாலும் முடிந்து அடங்கி விட்டது.

இனித்தான் சபைகளின் நிர்வாகம் பற்றிய விடயங்கள் கையாளப்படப் போகின்றன. தெரிவு செய்யப்பட்டஉறுப்பினர்களும், நிர்வாகிகளும் சபைகளை எப்படிக் கட்டி அவிழ்க்கப் போகின்றார்கள், அவர்கள் பண்ணும் காரியங்களின் சீத்துவம் யாது என்பவை எல்லாம் இனி, இனித்தான் அம்பலத்துக்கு வரும்.

தேர்தல் சமயத்தில் நமது கட்சிகள், தரப்புகள் இடையே கட்டவிழ்ந்த மோதல்கள் ஒரு தனிரகம் – வேட்பாளர்கள் தெரிவிலும், சபைகளைத் தேர்தலுக்கு முன்னரே பங்கு பிரிப்பதிலும் கட்சிகளும் கூட்டுக்களும் அடித்த அரசியல் கூத்தைக் கண்டு நாம் பிரமித்துத்தான் போனோம்.

கூட்டை விட்டு வெளியேறப் போகின்றனர் என முதல் நாள் அச்சுறுத்தல் பகிரங்கமாகப் பறக்கும். அடுத்த நாள் மூடிய அறைக்குள், சமஸ்தானங்களைப் பங்கு போடுவதுபோல அந்தச் சபை உங்களுக்கு, இந்தச் சபை எங்களுக்கு என்று கன்னை பிரிப்பார்கள். அடுத்த நாள், தேர்தல் பங்கீடு உறுதி, எங்கள் கூட்டு உடைக்க முடியாத மிகப் பலமான பூட்டு என்ற பிரகடனமும் வெளிவரும்.

முதல் நாள் அந்தரத்தில் ஆடிய கூட்டு, அடுத்த நாள் எப்படிப் பலமான கூட்டாக மாறியது என்ற மாயாஜாலம் புரியாமல் மக்கள் விழிபிதுங்கியமை மட்டும்தான் இங்கு நடந்தது.

தேர்தல் திருவிழாக் காலத்தில் நடந்த பிரசாரக் கூத்துக்கள் பிறிதானதொரு தனிரகம்.

அது முடிந்து, முடிவுகள் வந்ததும் குதிரையோட்டம் ஆரம்பித்தது. தோற்ற வேட்பாளர்களையும், தமக்குப் பிடித்தமான நபர்களையும் சபை உறுப்பினர்களாக்குவதற்கு பெரும் பேரங்கள் நடந்தன. திருகோணமலையில் அந்தப் பேரம் பல லகரங்களை எப்படியதாகவும் தகவல்.

பல இடங்களில் தலைவர், உபதலைவர் தெரிவுகளுக்கு 'இறக்குமதி'களும் கூட நடந்தன. அதனால் கட்சிகள், கூட்டுகளுக்குள் குழப்பம்.

உதாரணமாக, திருகோணமலையில் இரண்டு பிரதான உள்ளூராட்சி சபைகளுக்கு தலைவர்களாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள் வட்டாரங்களில் போட்டியிட்டவர்கள் அல்லர். விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மூலம் தெரிவானவர்களும் அல்லர். வட்டாரங்களில் வெற்றி பெற்ற இருவரைப் பேரம் பேசி இராஜினமாச் செய்ய வைத்து, அந்த இடங்கள் மூலம் பின்கதவால் கொண்டு வரப்பட்டு, நகரபிதாவாகவும், தவிசாளராகவும் பதவியில் அமர்த்தப்பட்டிருக்கின்றார்கள்.

இந்தத் தலைவர், உபதலைவர் அல்லது தவிசாளர், உபதவிசாளர் தெரிவுகளுக்காக நடந்த அரசியல் கூத்துகள் புரிந்து கொள்ளவே முடியாத கந்தர்வ கோலங்கள்.

எந்தக் கட்சி அல்லது கூட்டு. எந்தப் பக்கம் நிற்கின்றது, எந்தச் சபையில் யார், யாரை ஆதரிக்கின்றார்கள் என்பவை எல்லாம் புரியமுடியாத புதிர்களாக இருந்தன.

காலையில் நடந்த ஒரு சபைத் தெரிவில் ஒரு கட்சியை ஆதரித்த பிறிதொரு கட்சி, மாலையில் பக்கத்துச் சபையில் நடந்த தெரிவில் தலைகீழாக முரண்பட்டு நிற்கும் கூத்தையும் கூடத் தரிசித்தோம்.

பல இடங்களில் திருவுளச் சீட்டு அதிர்ஷ்டமும் சில கட்சிகளும் நிர்வாகத்தைத் பிடிப்பதற்கு உதவியது என்பதும் மறுக்க கூடியதல்ல.

ஓரிடத்தில் காலை வாரியமைக்காக பிறிதொரு இடத்தில் பழிதீர்த்தல் என்ற அரசியல் கோட்பாடும் கூடக் கட்டவிழ்ந்தது.

அரசியல் அணி சேரல், கூட்டுச் செயற்பாடு, இணக்கப் போக்கு என்ற விடயங்கள் நாளொரு பக்கமும், பொழுதொரு திருப்பமுமாக திடுக், திடுக் அத்தியாயங்களாக மாறியமையையும் கூட மக்கள் செய்திகளாக அவதானிக்கும் வாய்ப்புக் கிட்டியது.

நிர்வாகிகள் தெரிவு என்ற சொக்கட்டான் ஆட்டத்தில் காய்களை உருட்டிப் போட்டு விடயங்களை நகர்த்தியாயிற்று.

சபையில் 25 வீத உறுப்பினர்களைக் கூடப் பெறாத கட்சிகள், கூட்டுக்கள் இந்த அரசியல் சொக்கட்டான் ஆட்டம் மூலம் தவிசாளர் பதவிகளையும், நிர்வாகங்களையும் கைப்பற்றி விட்டன.

சரி, இனி இந்த அறுதிப் பெரும்பான்மை இல்லாத பலத்தை வைத்துக் கொண்டு சபைகளை எப்படி இயக்கப் போகின்றார்கள்?

தந்திரமாக – சாணக்கியமாக – அனைவரையும் அரவணைத்து – தனித்துவமான நிர்வாகத் திறமை மூலம் விடயங்களைக் கையாண்டாலே தவிர, இந்த முயற்சியில் இலக்குகளைச் சாதிக்க முடியாது.

பெரிய ரணகளப்பட்டு கைப்பற்றிய உள்ளூராட்சி நிர்வாகங்களை சம்பந்தப்பட்ட தரப்புகள் எப்படிக் கையாளப் போகின்றன என்பது அடுத்த ஓரிரு வாரங்களுக்குள் தெளிவாகத் தொடங்கி விடும் என எதிர்பார்க்கலாம்.

# விடுபட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை

## ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் உறுதி தெரிவிப்பு



நேர்முகத் தேர்வுக்கு உள்வாங்கப்படாத ஏனைய தொண்டராசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஈ.பி.டி.பி. செயலாளர் நாய கம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்தார்.

தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பிலான நேர் முகத்தேர்வு நேற்று நடைபெறவிருந்த நிலையில் குறித்த நேர்முகத் தேர்வில் இணைத்துக்கொள்ளப்படாத – எஞ்சியுள்ள – தொண்டர் ஆசிரியர்கள் தமக்கான நியமனங்களையும் உறுதிசெய்து தருமாறு கோரி ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து கோரிக்கை விடுத்தனர்.

கொழும்பில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போதேபாதிக்கப்பட்ட தொண்டராசிரியர்கள் ஒருதொகுதியினர் இவ்வாறு கோரிக்கை விடுத்தனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தொண்டராசிரியர் நிரந்தரமாக்கலுக்கான நேர்முகத் தேர்வில் உள்வாங்கப்பட்டமிகுதிதொண்டராசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகத்தேர்வு நேற்று நடைபெற்றது.

ஆனாலும் இந்த நேர்முகத் தேர்வுக்கு விண்ணப்பித்திருந்தும் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்காது எஞ்சியுள்ள தொண்டராசிரியர்கள் தமது நிரந்தரமாக்கலுக்கான கோரிக்கையை நேற்றுமுன்தினம் டக்ளஸ் தேவானந்தா எம்.பியிடம் முன் வைத்தனர்.

நீண்டகாலமாக ஊதியங்களைக் கூட எதிர் பாராது தாம் கற்பித்தல்செயற்பாடுகளில் ஈடுபட்டனர் எனவும், அந்தத் தொழிலையே தமது எதிர்காலமாக நம்பியிருக்கின்றனர் எனவும் இந்தச் சந்தர்ப்பம் தமக்கு கிடைக்காது போனால் தமது குடும்ப நிலை பாதிக்கப்படும் எனவும் தெரிவித்த அவர்கள் தமக்கும் அச்சந்தர்ப்பத்தை பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்திய டக்ளஸ் தேவானந்தா கல்வி அமைச் சர் அகிலவராஜ் காரியவசத்துடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடியதன் பிரகாரம் இந்தத் தொண்டராசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பில் காலக் கிரமத்தில் தீர்வு பெற்றுத் தருவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என உறுதி அளித்தார்.

## வவுனியா விபத்தில் நால்வர் காயம்

வவுனியா – வைரவ புளியங்குளம் பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில்மூன்றுபேருடன் அதிவேகமாக பயணித்தமோட்டார்சைக்கிள் ஓட்டோவுடன் மோதி விபத்துக்குள்ளானது. விபத்தில் பெண் உட்பட நால்வர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளனர்.

கதிரேசன் வீதியூடாக ரயில் நிலையம் நோக்கிப் பயணித்த ஓட்டோ மீது வைரவப்புளியங்குளம் வைரவர் கோவில் வீதி இரண்டாம்ஒழுங்கையிலிருந்து கதிரேசன் வீதி நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.

# வவுனியா நகர சபையினருடன் முஸ்லிம் வர்த்தகர்கள் முறுகல்

வவுனியா, ஏப்.20

வவுனியா நகரசபை பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் முஸ்லிம் வர்த்தகர்களுக்கும் இடையில் முறுகல் நேற்று ஏற்பட்டது.

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த வியாபார நிலையங்களை அகற்றும் செயற்பாட்டில் நகர சபை அதிகாரிகள் ஈடுபட்டபோதே இந்த முறுகல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.



வவுனியாவில் போக்குவரத்துக்கு இடையூறாக வீதியோரங்களில்சட்டவிரோதமாகவியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தக நிலையங்களை அகற்றும் நடவடிக்கை வவுனியா நகர சபையினாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக நேற்று வியாழக்கிழமை வவுனியா குருமண்காட்டு பகுதியிலுள்ள முஸ்லிம்வர்த்தகர் ஒருவருடைய சட்டவிரோத வியாபார நிலையம் ஒன்றை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட நகரசபைப் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள், வரிப் பரிசோதகர்கள், நகர சபை ஊழியர்களின் செயற்பாட்டைத் தடுக்கும் விதமாக அப்பகுதி முஸ்லிம் வர்த்தகர்கள் நடந்ததுடன், அவர்களை அச்சுறுத்தும் செயற்பாட்டையும் மேற்கொண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அந்த வர்த்தகர்கள் பிரதேசவாதத்தை ஏற்படுத்தும் வகையில் நகர சபை உத்தியோகத்தர்களுடன் பேசியமையால் அங்கு குழுமியிருந்த மக்களுக்கும் முஸ்லிம் வர்த்தகர்களுக்குமிடையிலும் முறுகல் ஏற்பட்டது.

பின்னர் நிலைமை சுமுகமான தாகக் கூறப்பட்டது. (ஐ)

# இன நல்லிணக்கம் வேண்டி நல்லூரில் இருந்து யாத்திரை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.20

இனங்களிடையே அமைதி, நல்லிணக்கம் நிலவவேண்டி யாழ்ப்பாணம் நல்லூரிலிருந்து சிவனொளிபாதமலை வரை புனித திருத்தல யாத்திரை நேற்றுக் காலை ஆரம்பமானது.

இந்துசமயத் தொண்டர் சபை, சின்மயமிசன்ஆகியனஇணைந்து இதனை முன் னெடுக்கின்றன.

ஈழ நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து நேற்றுக் காலை 9 மணிக்கு யாத்திரை ஆரம்பமானது.

யாழ்ப்பாணம் நாக விகாரை விகாராதிபதி, யாழ்ப்பாணம் சின்மய மிசன் சுவாமிகள் ஆகியோர் இணைந்து யாத்திரையை ஆரம்பித்துவைத்தனர். (ஐ-7)

## நாளை

21.04.2018
சனிக்கிழமை

நட்சத்திரம் : திருவாதிரை மு.இ. 10.03 வரை
திதி : ஷஷ்டி மு.இ. 09.04 வரை
சுபநேரம் : 03.01 – 04.31 வரை
இராகுகாலம் : 09.01 – 10.31 வரை

# தொண்டராசிரியர் தேர்வுக்கான கடிதம் கிடைக்காதவர்கள் உடனடியாக மாகாண அமைச்சைத் தொடர்புகொள்ளவும்

**இம்ரான் மஹ்ரூப் எம்.பி. தெரிவிப்பு**



கொழும்பு, ஏப். 20

தொண்டராசிரியர் நேர்முகத் தேர்வுக்கான கடிதம் கிடைக்கப் பெறாதவர்கள் உடனடியாக மாகாண அமைச்சை தொடர்பு கொள்ளவும் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

விரைவில் வழங்கப்படவுள்ள தொண்டராசிரியர் நியமனம் தொடர்பாக நேற்றுமுன்தினம் கல்வி அமைச்சர் அகில்விராஜ் காரியவசம் உடன் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

தொண்டர் ஆசிரியர் நியமனம் தொடர்பாக பல்வேறு முறைப்பாடுகள் தனக்கு கிடைக்கப்பெற்றமையால் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி அமைச்சின் செயலாளர்,கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் உள்ளிட்ட குழுவினரை சந்தித்து இந்த நியமனம் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்த நியமனம் தொடர்பான நடவடிக்கைகளை திருகோணமலை தொண்டர் ஆசிரியர் சங்கம் உரியமுறையில் மேற்கொள்ளவில்லை. மேலும் தொண்டர் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்ட கவனவீர்ப்பு போராட்டத்தின் போது பிரதமரின் விசேட பிரதிநிதிகளாக அந்த இடத்துக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான இம்ரான் மஹ்ரூப், பேராசிரியர் ஆசு மாரசிங்க குழுவினரால் வழங்கப்பட்ட அறிக்கை முறையாக பின்பற்றபடவில்லை.

இதனால், தகுதியுள்ள தொண்டராசிரியர்கள் பலருக்கு நேர்முகத்தேர்வுக்கான கடிதம் கிடைக்கப்பெறவில்லை. தகுதியற்ற பலருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டுக்கு முன்னர் மூன்று வருடங்களுக்கு மேல் தொண்டராசிரியராக பணியாற்றியவர்கள் அனைவரும் நேர்முகத் தேர்வுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இவ்வாறு கடமையாற்றி இதுவரை நேர்முகத்தேர்வுக்கு கடிதம் கிடைக்கப்பெறாதவர்கள் உடனடியாக சகல ஆவணங்களுடன் கிழக்கு மாகாணகல்வி அமைச்சை தொடர்புகொண்டு பதிவு செய்து கொள்ளுங்கள். இது தொடர்பான அறிவித்தல் கல்வி அமைச்சின் செயலாளரால் மாகான கல்வி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பதிவு செய்யும் தகுதியுள்ள தொண்டர் ஆசிரியர்கள் அனைவரும் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள் எனவும் பத்தரமுல்லவில் அமைந்துள்ள கல்வி அமைச்சிலேயே இறுதி நேர்முகத் தேர்வு நடைபெறும் எனவும் கல்வி அமைச்சர் உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளியேறிய சு.க. 16 உறுப்பினர்களும் மகாநாயக்க தேரர்களை சந்திக்க முடிவு



கொழும்பு, ஏப். 20

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளித்து அரசிலிருந்து வெளியேறிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 16 உறுப்பினர்களும் கண்டிக்குச் சென்று பௌத்த மகாநாயக்க தேரர்களைச் சந்திக்கவுள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் லஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவின் இல்லத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே லஷ்மன் யாப்பா அபேவர்தன இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு: –

மகாநாயக்க தேரர்களைச் சந்தித்ததன் பின்னர் கட்சித் தலைவர்கள் மற்றும் பல்வேறு குழுக்களைச் சந்தித்து எதிர்கால நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது தொடர்பில் கலந்துரையாடவுள்ளோம்.

எதிர்க்கட்சியாக இருந்து கொண்டு நாம் இந்த அரசின் வேலைத்திட்டங்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாடுகள் மற்றும் மக்களுக்கு வரும் அழுத்தங்கள் தொடர்பில் மக்களுக்கு நாம் செய்ய வேண்டிய செயற்பாடுகள் எவை என்பது தொடர்பில் நாம் கலந்துரையாடினோம்.

இதேவேளை, இந்த மாதம் 23 ஆம் திகதியின் பின்னர் எமது வேலைத் திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளோம் என்றும் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

## நுவரெலியாவில் மஹிந்த ராஜபக்ஷ



கொழும்பு, ஏப். 20

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நுவரெலியாவில் சுற்றுலா மேற்கொண்டுள்ளார் 72 வயதானாலும் மிகவும் இளமையாக நுவரெலியாவில் சுற்றித்திரியும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன.

இந்த நாள்களில் நுவரெலியாவில் ஓய்வெடுத்து வரும் மஹிந்த உடற்பயிற்சியில் ஈடுபட்டுள்ள காட்சிகள் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

நுவரெலியா கிரகரி ஏரிக்கு அருகில் உடற் பயிற்சியில் ஈடுபடுவதற்கு மஹிந்த மற்றும் அவரது மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

நுவரெலியாவில் சுற்றுலா பருவகாலம் ஆரம்பித்துள்ள நிலையில், நாட்டின் பல பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அங்கு படையெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை –

**யாழ் பிரதேசத்தில் -**

சண்டிலிப்பாய், சீரணி, ஆலங்குளம் ஆகிய இடங்களிலும் –

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

நாச்சிக்குடாவிலும்

**மன்னார் பிரதேசத்தில் -**

முருங்கனிலிருந்து நானாட்டான் வரை, அறுகுக்குன்று, முருங்கனிலிருந்து முள்ளிக்குளம் வரை, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், செம்மண்தீவு நெற்களஞ்சியம் ஆகிய பிரதேசங்களிலும் –

மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## கும்பாபிஷேகம்

அராலி, ஏப்.20

அராலி வடக்கு இலந்தலைத் தாழ்வு ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய ஜீர்னோத்தாரண அஷ்டபந்த மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி மதல் 10 மணி வரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.

இக் கும்பாபிஷேகத்திற்குரிய கிரியைகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பமானதுடன் நாளை சனிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 5 மணி வரையும் பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (இ)

★★★

வவுனியா, ஏப்.20

வவுனியா – தோணிக்கல் அருள்மிகு ஸ்ரீசர்வ சித்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 6.30 மணி மதல் 7.26 மணிக்குள் வரும் சுப முகூர்த்த வேளையில் நடைபெற திருவருள் கூறியுள்ளது.

தொடர்ந்து 11 நாள்கள் மண்டலாபிஷேகமும் 12 ஆம் நாள் சங்காபிஷேகமும் நடைபெறும்.

## ஈரான் சபாநாயகர் இலங்கை வந்தார்



கொழும்பு, ஏப். 20

ஈரானிய நாடாளுமன்றத்தின் சபாநாயகர் அலி லரிஜானி நேற்றுமுன்தினம் இலங்கை வந்துள்ளார்.

தமது வியட்நாம் விஜயத்தை பூர்த்தி செய்து கொண்டு இலங்கைக்கு வருகைதந்த ஈரானிய சபாநாயகரை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌஸி தலைமையிலான குழுவினர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வரவேற்றனர்.

சபாநாயகர் அலி லரிஜானி இன்றுவரை இலங்கையில் தங்கியிருப்பார்.

## வெள்ளவத்தை விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 20

கொழும்பு, வெள்ள வத்தைப் பகுதியில் ஏற்பட்ட வீதி விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்களில் பயணித்த இளைஞனே இந்த கோர விபத்தில் உயிரிழந்துள்ளார்.

அந்தப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்ட தனியார் பஸ்ஸின் பின்னால் சென்ற மோட்டார் சைக்கிள் மோதுண்டமையால் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் பஸ்ஸின் பின்பக்க சில்லுக்குள் சிக்கிய நிலையில் பலத்த காயங்களுடன் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அந்த இளைஞர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துடன் தொடர்புடைய தனியார் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். வெள்ளவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கு காலி மாவட்டத்தில் பரந்த திட்டம்

கொழும்பு, ஏப். 20

காலி மாவட்டத்தில் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்காக பரந்த திட்டம் அமுலாகிறது.

இதற்காக கடந்தாண்டு விளையாட்டுத்துறை அமைச்சு செலவிட்ட தொகை ஒரு கோடி 75 லட்சம் ரூபாவாகும்.

இதன் கீழ் 11 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் பாடசாலை விளையாட்டு மைதானங்களும் பொது விளையாட்டுத்திடல்களும் அபிவிருத்தி செய்யப்பட்டன.

பாடசாலை மட்டத்தில் விளையாட்டுத்துறை ஆற்றல்களை மேம்படுத்தி, கிரிக்கெட்டை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# நாட்டில் எதுவித உரத் தட்டுப்பாடும் கிடையாது அமைச்சர் துமிந்த திஸாநாயக்க அறிவிப்பு

கொழும்பு, ஏப். 20

நாட்டில் எதுவித உரத்தட்டுப்பாடும் கிடையாது என விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் உரவிநியோகத்தில் எதுவித தட்டுப்பாடும், தாமதமும் ஏற்பட இடமளிக்கப்பட மாட்டாது. சகல விடயங்களையும் கணினிமயப்படுத்தி வருகின்றமையால் ஊழல் மோசடிகளுக்கும் இடமில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக விவசாயத்துறை அமைச்சர் மேலும் தெரி



விக்கையில் -

யூரியா, ரி.எஸ்.பி., எம்.ஓ.பி., எஸ்.ஏ என்ற சகல வகை உரங்களும் 1500 ரூபாவுக்கு குறைவான விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படும்.

ஒரு பொதி யூரியாவின் விலை மூவாயிரத்து 500 ரூபாவாக இருந்தால் அரசு இரண்டாயிரம் ரூபாவை பொறுப்பேற்கும்.

அதேபோன்று நெற் செய்கைக்கான உரப்பொதிக்கான செலவில் மூவாயிரம் ரூபாவை அரசு ஏற்கிறது. இது தொடர்பில் ஏதேனும் முறைப்பாடுகள் இருந்தால், 011 - 303 - 6666 என்ற தொலைபேசி ஊடாக அறிவிக்கலாம் என்று அவர் தெரிவித்தார்.

# தினசரி ராசி பலன் (20.04.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் சித்திரை 7 ஆம் நாள் வெள்ளிக்கிழமை பஞ்சமித்திதி. இரவு 8.46 மணி வரை பின்னர் ஷஷ்டி. நட்சத்திரம்: மிருகசீரிடம் இரவு 9.14 மணி வரை. பின்னர் திருவாதிரை. சித்தயோகம் முழுவதும்.

ராகுகாலம் - பகல் 10.37 மணி முதல் 12.09 மணி வரை

சுபநேரம் - காலை 5.58 மணி முதல் 7.28 மணி வரை

இன்று ஸ்ரீ சங்கர ஜயந்தி

திவசம் செய்ய வேண்டிய திதி - சித்திரை மாத வளர்பிறை பஞ்சமி.

பிறந்த நட்சத்திர வழிபாடு - மிருகசீரிடம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அதிகமாகும். யாருடனும் வார்த்தைகளைக் கவனத்துடன் பிரயோகித்தால் பிரச்சினைகள் ஏற்படா. புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**ரிஷபம்** இனிமையான நாள். பணவரவு திருப்தியைத் தரும். குடும்பச் சூழல் இனிமையாக அமையும். மனதில் தெம்பும், தைரியமும், உடல் ஆரோக்கிய முன்னேற்றமும் காண முடியும். சுயதொழில் வியாபாரம் சிறப்படையும்.

**மிதுனம்** கவலையான நாள். பணவரவு குறையும். மன உளைச்சல் உண்டாகும். வியாபாரத்தில் லாபம் குறையும். உத்தியோகத்தில் கடின உழைப்பும், அலைச்சல்களும் அதிகரிக்கும். உறவினர்களால் தொல்லை உண்டாகும்.

**கடகம்** நன்மையான நாள். வருமானம் வளமாக இருக்கும். உடல் நலம் சீராக இருக்கும். தொழிலில் லாபம் கிடைக்கும். பகையாய் இருந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்புண்டு. புது முதலீடு பலன் தரும்.

**சிம்மம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். மருத்துவ செலவுகள் அதிகரிக்கும். வீண் அலைச்சல்கள் உண்டாகும். உறவினர்கள், நண்பர்கள் உதவியாய் இருப்பார்கள்.

**கன்னி** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப நிலையில் நல்ல ஒற்றுமை இருக்கும். ஆரோக்கியம் சிறக்கும். இவர்களின் செயற்திறன் மேம்படும். முயற்சிகள் வெற்றி இலக்கை நோக்கிப் போகும்.

**துலாம்** தீமையான நாள். பொருளாதாரம் நலிவடையும். தேக நலம் பாதிப்புறும். உடலாரோக்கியம் குன்றும். தொழிலில் அல்லல், அலைச்சல் இருக்கும். வாகனம் ஓட்டும் போது கவனம் தேவை.

**விருச்சிகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். எடுக்கும் முயற்சிகளில் தடை, தாமதம் உண்டாகும். எப்போதும் பரபரப்பும் கூடுதல் வேலைப் பளுவுடனும் இருப்பார்கள்.

**தனுசு** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை நீடிக்கும். கௌரவம் உயரும். புதிய வேலை வாய்ப்புக்கள் கிடைக்கும். அரசு வழியால் காணி கிடைத்து வீடு கட்டுவார்கள்.

**மகரம்** நன்மையான நாள். நிதிநிலைமை வளமாக இருக்கும். உடல் உபாதை நீங்கும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். சகோதர உறவு பலப்படும். ஆடை, ஆபரணங்கள் சேரும்.

**கும்பம்** துயரமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும். எடுக்கும் முயற்சிகள் தோல்வியில் முடியும். திடீர் பயணங்களால் செலவுகள் ஏற்படும்.

**மீனம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். நாவடக்கத்துடன் செயற்படுவது நல்லது. மற்றவர்கள் விஷயத்தில் தலையிட வேண்டாம். வியாபாரத்தில் போட்டிகள் இருக்கும்.

சந்திராஷ்டம நாள்: சித்திரை 3ஆம், 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் சுபகாரியங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

# கிளிநொச்சியில் பண்பாட்டு விழா

கிளிநொச்சி, ஏப்.20

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் நிதிப்பங்களிப்புடன் கிளிநொச்சி மாவட்ட செயலகமும் மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மாவட்ட பண்பாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஏ9 வீதியில் (டிப்போ சந்திக்கு அருகில்) அமைந்துள்ள மாவட்ட செயலக பயிற்சி நிலையத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வை முன்னிட்டு பாரம்பரியப் பொருள்கள், பாரம்பரிய உணவுகள், கைவினைப் பொருள்கள், மற்றும் மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களின் நூல்கள் என்பவற்றின் கண்காட்சியும் விற்பனையும் பயிற்சி நிலையத்தில் இடம்பெறும் எனவும் மாவட்டப் பண்பாட்டுப் பேரவை அறிவித்துள்ளது.

மாவட்ட பண்பாட்டுப் பேரவைத் தலைவரும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருமான சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும்.

இந் நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபர் உருவை எஸ். தில்லை நடராசா சிறப்பு விருந்தினராக வடக்கு மாவட்ட பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அபிராமி பாலமுரளி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக கிளிநொச்சி முதுபெருங் கலைஞர் சதாசிவம் தில்லை நடராசா கலந்து கொள்ளவுள்ளார். இந் நிகழ்வில் இளங்கலைஞர் - 2017, கலைக் கிளி -2017 ஆகிய விருதுகள் வழங்கப்படவுள்ளன.

(இ)

# நூல் அறிமுக விழா

இந்திய பத்திரிகையாளர் இ.ராமகிருஷ்ணன் எழுதிய "ஓர் இனப்பிரச்சினையும் ஓர் ஒப்பந்தமும்" நூல் அறிமுக விழா நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் இடம்பெறும்.

யாழ்.ஊடகமையாளர் சம்மேளனம் ஒழுங்கு செய்துள்ள இந் நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பொறியியல் கலாநிதி க.விக்னேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன், வடமாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா ஆகியோர் நூல் ஆய்வுரை நிகழ்த்துவர்.

வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வடகிழக்கு மாகாணசபை முன்னாள் துணைச் செயலாளர் சி.கிருஷ்ணாநந்தன் ஆகியோர் கருத்துரை வழங்குவர்.

(இ)

# யாழ். பல்கலை பரீட்சைகள்




யாழ்ப்பாணம், ஏப்.20

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஒத்திவைக்கப் பட்டிருந்த கலைப்பீட நான்காம் வருட முதலாம் அரையாண்டு பரீட்சைகள் எதிர் வரும் 25 ஆம் திகதி தொடக்கம் இடம்பெறும். இராமநாதன் நுண்கலைக்கழக செயன்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் இடம்பெறும் என்றும் கலைப்பீடாதிபதி கலாநிதி க.சுதாகர் அறிவித்துள்ளார். பல்கலைக் கழக ஊழியர்களது போராட்டம் காரணமாக இந்தப் பரீட்சைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(இ)

# கினிகத்தேனையில் ஆணின் சடலம் மீட்பு



கொழும்பு, ஏப். 20

கினிகத்தேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரஞ்சுராவ ஹத்லாவ பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்டவர் 59 வயதுடைய சுனில் வனிகசேகர திஸாநாயக்க என அடையாளம் காணப் பட்டுள்ளார்.

இந்த நபர் தனது வீட்டில் தனிமையிலேயே வாழ்ந்து வந்துள்ளார் எனவும் தினமும் நண்பர்களுடன் சேர்ந்து மதுபானம் அருந்துபவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# பழைய மன்னார் வீதி தற்காலிகமாக பூட்டு!

கொழும்பு, ஏப். 20

அங்கமுவ நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் இரண்டு திறக்கப்பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இதனால் புத்தளம் - மன்னார் (பழைய மன்னார் வீதி) வீதியில் எழுவன்குளம் பகுதியில் வெள்ளம் ஏற்பட்டமையால், பாதை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், மாற்று பாதைகளை பயன்படுத்துமாறு சாரதிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்பந்தனுக்கு எதிரான பிரேரணையை கூட்டு எதிர்க்கட்சி நிச்சயம் கொண்டுவரும்!

கொழும்பு, ஏப். 20

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு எதிராக நிச்சயமாக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கூட்டு எதிர்க்கட்சி கொண்டு வரும்.

சில தினங்களில் கூடவுள்ள கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்றக்குழு இது குறித்தநடவடிக்கைகளை எடுக்கவுள்ளது என்று கூட்டு எதிர்க் கட்சியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிர்ப்பு வெளியிட்ட உலகின் ஒரே ஒரு எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தனே காணப்படுகின்றார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது எனக் கூறப்படுகின்றமை குறித்து கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு எதிராக நிச்சயமாக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கூட்டு எதிர்க்கட்சி கொண்டு வரும். சில தினங்களில் கூடவுள்ள கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்றக் குழு இது குறித்த நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது. புது வருடத்தின் பின்னர் கூட்டுஎதிரணியின் நாடாளுமன்ற குழு இன்னும் கூடவில்லை.

சில தினங்களில் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற குழுக் கூடி இது தொடர்பில் முடிவெடுக்கவுள்ளது. ஆனால்,



நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுவது உறுதியாகிவிட்டது. சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட வேண்டியது அவசியமாகும்.

காரணம் அவர் எதிர்க்கட்சிக்குரிய வகிபாகத்தைச் சரியான முறையில் முன்னெடுக்கவில்லை. பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிர்ப்பு வெளியிட்ட உலகின் ஒரே ஒரு எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தனே காணப்படுகின்றார். எனவே, அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும்.

தனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டால் அதனை எதிர்கொள்ள தயார் என்று சம்பந்தனும் அறிவித்துள்ளார்.

எனவே, அதனைக் கொண்டு வரலாம். மேலும் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டாலும் அதனால் அரசுக்குள் கடும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இதுவே எமக்கு கிடைத்த வெற்றிதான் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (கு)

**கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு**

## உடவளவ நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டில் அபாய நிலை இல்லை!



கொழும்பு, ஏப். 20

உடவளவநீர்த்தேக்கத்தின் அணைக்கட்டில் எதுவித அபாய நிலைமையும் இல்லை என்று மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்த அணைக்கட்டில் கோடுகள் கீறப்பட்டதைப் போன்றதொரு நிலைமை காணப்பட்டது. இதனை நேற்று முன்தினம் நேரில் சென்று அவதானித்த பின்னர் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். அணைக்கட்டுக்களில் வெடிப்புகள் ஏதும் ஏற்படவில்லை. இது குறித்து மக்கள் அநாவசியமாக அச்சப்படத் தேவையில்லை.

பெரிய கொங்கிறீட் அணைக்கட்டுகளில் கோடுகள் உருவாகின்றமை வழமையானது எனப் பொறியியலாளர்கள் கூறினர் என்றும் மின்வலு மற்றும் புதுப்பிக் கத்தக்க சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம் பலப்பிட்டிய சுட்டிக்காட்டினார்.

## நல்லாட்சி அரசால் மக்களுக்கு நன்மை எதுவும் ஏற்படவில்லை

கொழும்பு, ஏப். 20

நல்லாட்சி அரசால் மக்களுக்கு எவ்வித நன்மைகளும் ஏற்படவில்லை என முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு தொட்டலங்கப் பகுதியில் அமைந்துள்ள கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எனக்கு அமைச்சு பதவி ஒன்றை வழங்குவதற்கு ஜனாதிபதி மறுக்கவில்லை. நாட்டை அபிவிருத்தி செய்ய இணைந்து செயற்பட வேண்டும் என்பதே எனது நோக்கமாக அமைந்துள்ளது.

நல்லாட்சி அரசு அழிவுப் பாதையில் செல்வதுடன் நாட்டை நகைப்பிற்குரியதாக மாற்றியுள்ளது.



ரவி கருணாநாயக்க கூறுகிறார்

நான் அமைச்சராக இருந்த காலத்தில் எரிவாயு உள்ளிட்ட பொருள்களின் விலைகளை குறைத்திருந்தேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப், 20

யாழ் மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும் பேரவையின் தலைவருமான நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறவுள்ள இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் சகல உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

* * *

பலாலி இராஜஸ்வரி அம்மன் ஆலய பொதுக் கூட்டமும் பரிபாலன சபைத் தெரிவும் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் த.நவரத்தினம் தலைமையில் நடைபெறும்.

விருந்தினராகவலி.வடக்குப்பிரதேச செயலாளர் கலந்து கொள்வார். (இ)

## ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உயர்தரத்தில் ஜனநாயகம்



சுட்டிக்காட்டுகிறார் நவீன்

கொழும்பு, ஏப். 20

யார் என்ன அறிவிப்புக்களை விடுத்தாலும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உயர் தரத்தில் ஜனநாயகம் இருக்கிறது என அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சி தலைவர் உட்பட கட்சிக்கான அதிகாரிகள் நியமனத்திலும் தற்பொழுது சுயாதீனமான சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நுவரெலியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

ஐ.தே.கட்சிக்குள் ஜனநாயகம் குறைவு எனவும், குறிப்பிட்ட சிலரிடம் அதிகாரம் சுற்றுகிறது என்றும் அந்தக் கட்சியிலுள்ள முக்கிய உறுப்பினர்களால் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட வேளையிலும் இந்தக் கருத்தை அடிப்படையாக வைத்தே பிரதமருக்கு எதிராக இராஜாங்க அமைச்சர் பாலித ரங்கே பண்டார தலைமையில் 27 எம்.பிக்கள் கூட்டுச் சேர்ந்ததன் மூலம் கட்சியின் உள்வீட்டுப் பிரச்சினை வீதிக்கு வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வலி.கிழக்கு சபையின் முதல் அமர்வு இன்று

அச்சுவேலி, ஏப்.20

வலி.கிழக்குப் பிரதேச சபையின் முதலாவது கன்னி அமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தவிசாளர் தியாகராசா நிரோஷ் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டம் வலி. கிழக்குப் பிரதேச சபையின் புத்தூரில் உள்ள தலைமைக் காரியாலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## சுவிஸில் பஸ் விபத்து; இலங்கையர்கள் காயம்!




கொழும்பு, ஏப். 20

சுவிற்ஸலாந்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் இலங்கையர்கள் 12 பேர் காயமடைந்துள்ளனர் என அந்த நாட்டு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சுற்றுலாவுக்குச் சென்ற இலங்கையர்களை ஏற்றிச்சென்ற பஸ் ஒன்று நேற்றுமுன்தினம் சுவிஸில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் 15 பேர் வரையில் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 15 பேரில் 12 பேர் இலங்கையர்கள் என அந்த நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. 40 சுற்றுலாப் பயணிகள் சென்ற இந்த பஸ் சூரிச்சின் வடக்குப் பகுதி அதிவேக வீதியில் வைத்து இரண்டு கனரக வாகனங்களுடன் மோதியுள்ளது.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 3.15 இற்கு இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் ஒருவர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தீவிரவாதம் தொடர்பில் இலங்கையர் சவூதியில் கைது!

கொழும்பு, ஏப். 20

தீவிரவாதம் தொடர்பில் சவூதி அரேபியாவில் இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 24 நாள்களில் தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தில் 59 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்களில் இலங்கையர் ஒருவரும் உள்ளடங்குகிறார் எனவும் சவூதியின் saudi gazette இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 7 ஆம் திகதி கைது செய்யப்பட்ட அவரது தனிப்பட்ட விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

சவூதியில் தேசிய பாதுகாப்பு தலைமையகத்தின் புள்ளி விவரங்களை மேற்கோள்காட்டி இந்தச் செய்தி வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்ப் புத்தாண்டு பலன்




எளிதில் காதல் வயப்படும் மீனராசி அன்பர்களே, உங்கள் ராசி நாதன் குரு பகவான் 8 இல் இருப்பதால் எதிலும் கவனமுடன் செயற்படுவது நல்லது. வீண் பிரச்சினைகளில் தலையிட வேண்டாம். மனதை அமைதியாக வைத்துக் கொள்ளுங்கள். எந்த பிரச்சினையையும் நாசுக்காக கையாளுங்கள். இல்லையெனில் விலகிச் சென்று விடுங்கள். உடல் நிலையில் கவனம் தேவை. நன்மை, தீமைகளை பகுத்தறிந்து விழிப்புணர்வுடன் செயல்பட்டால் வெற்றி பெறலாம்.

குருபகவான் 11/10/2018 வரை உங்கள் ராசிக்கு 8 இல் சஞ்சரிப்பதால் எதிர்பாராத பிரச்சினைகள் உருவாகும். இரவு நேர பயணம் மற்றும் நீண்ட தூரப் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. யாருக்கும் பணம் கொடுக்கல், வாங்கல் விடயங்களில் பிணை நிற்க வேண்டாம். வீண் வம்பு, வழக்குகளை சந்திக்காமல் இருக்க பொறுமை அவசியம். 11/10/2018 இற்கு பிறகு உங்கள் பிரச்சினைகள் தீர்ந்து எதிலும் சுமுகமான சூழல் உருவாகும். தெய்வ அனுகூலம் உண்டாகும். புகழ், செல்வாக்கு அதிகரிக்கும். கௌரவ பதவி கிடைக்கும்.

ராகு, கேது முறையே 6/3/2019 வரை உங்கள் ராசிக்கு 5,11 இல் இருப்பதால் குழந்தைகள் உடல் நலனில் கவனம் தேவை. குழந்தைகளை கண்காணிப்பில் வைத்து அன்புடன் அரவணைத்துச் செல்வது நல்லது. பூர்வீக சொத்து விடயங்களில் கவனம் தேவை. யோகா, தியானம், இறை வழிபாடு இவற்றால் மனக் குழப்பத்தைத் தவிர்க்கலாம். குலதெய்வ வழிபாடு அவசியம். இருப்பினும் பல வகையில் ஆதாயம் உண்டாகும். நண்பர்கள் மற்றும் மூத்த சகோதரர்களின் உதவி கிடைக்கும். முயற்சிகள் வெற்றி அடையும்.

6/3/2019 இற்கு பிறகு ராகு, கேது முறையே உங்கள் ராசிக்கு 4,10 இற்கு வருவதால் தாய்க்கு உடல்நிலை பாதிப்பு ஏற்படும். தாய் மற்றும் உறவினர்களுடன் மனக்கசப்பு ஏற்படும் என்பதால் கவனம் தேவை. வீடு, வாகனம், நில ஆவணங்களை கவனமுடன் கையாள்வது நல்லது. உத்தியோகத்தில் உயரதிகாரிகள், சக ஊழியர்களால் பாதிப்பு ஏற்படும் என்பதால் கவனம் தேவை. உங்களை பற்றிய வீண் வதந்தி பரவ வாய்ப்பு உண்டாகும் என்பதால் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. பொறுமையும், விழிப்புணர்வும் வெற்றிக்கு வழி.

சனிபகவான் இந்த வருடம் முழுவதும் உங்கள் ராசிக்கு 10 இல் சஞ்சரிப்பதால் தந்தையுடன் இருந்த கருத்து மோதல்கள் குறையும். பிதுர் வழி சொத்துப் பிரச்சினை தீரும். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும். உழைப்பின் பலனை அனுபவிக்க கூடிய காலமாகும். புதிய முயற்சிகள் வெற்றி பெறும். புதிய தொழில் தொடங்க உகந்த காலமாகும்.

**வியாபாரிகளே:**

11/10/2018 வரை வியாபாரத்தில் மந்த நிலை ஏற்படும். கூட்டாளிகள் மற்றும் பணியாளர்களை கண்காணிப்பில் வைத்துக் கொள்வது நல்லது. புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். 11/10/2018 இற்கு பிறகு வியாபாரத்தில் பல மடங்கு முன்னேற்றம் ஏற்படும். புதிய முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும்.

**உத்தியோகத்தர்களே:**

11/10/2018 வரை உத்தியோகத்தில் சிறு சிறு பிரச்சினைகள் வந்து கொண்டே இருக்கும் என்பதால் கவனம் தேவை. உயரதிகாரிகள், சக ஊழியர்களிடம் வெளிப்படையாகப் பேசுவதை தவிர்க்கவும். 11/10/2018 இற்கு பிறகு உத்தியோகத்தில் முன்னேற்றம் உண்டாகும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும்.

**மாணவ மாணவியர்களே:**

11/10/2018 வரை படிப்பில் அதிக கவனம் செலுத்துவது நல்லது. உடல் ஆரோக்கியம் படிப்பை பாதிக்காமல் கவனித்து கொள்ளுங்கள். ஆசிரியர் மற்றும் நண்பர்களிடம் நல்ல உறவை மேம்படுத்திக் கொள்ளுங்கள். 11/10/2018 இற்கு படிப்பில் அதிக மதிப் பெண் பெற்று அனைவரின் பாராட்டினை பெறுவீர்கள்.

**அரசியல்வாதிகளே:**

11/10/2018 வரை தலைமையிடம் அதிக உரிமை எடுத்து கொள்ள வேண்டாம். சகாக்களிடம் வெளிப்படையாக பேசுவதை தவிர்க்கவும். 11/10/2018 இற்குப் பிறகு தலைமை மற்றும் சகாக்கள் தங்களுக்கு அனுகூலமாக இருப்பார்கள். புகழ், பெருமை அதிகரிக்கும். தலைமை உங்களிடம் புதிய பொறுப் புகளை ஒப்படைப்பார்கள்.

**கலைத்துறையினரே:**

11/10/2018 வரை தற்போதுள்ள வாய்ப்புகளை சரியாக பயன்படுத்திக் கொள்ளுங்கள், புதிய வாய்ப்புகள் தாமதமாகும். யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம். 11/10/2018 இற்குப் பிறகு புதிய வாய்ப்புகள் தேடி வரும். புகழ், மரியாதை உயரும். பிரபலமாவீர்கள்.

**பரிகாரம்:**

படிக்கும் குழந்தை மற்றும் மாணவர்களுக்குக் கல்விக்கு பண உதவி செய்தல்.

ஸ்ரீ குருபகவான், ராகு, கேது பகவானுக்கு ஹோமம் , பூஜை மற்றும் ஆலய வழிபாடு செய்தல்.

சிவபெருமானுக்கு பாலபிஷேகம், ஹோமம், பூஜை ஆலய வழிபாடு செய்தல்.



# சிறுவர் துஷ்பிரயோகமும் அதன் உருவாக்கமும்

*பூர்ணிமா கருணாகரன்*

இன்று தென் கிழக்காசிய நாடுகள் எதிர்கொள்ளும் பெரும் பிரச்சினைகளில் ஒன்றாக சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுகிறது. இது மேற்குலக நாடுகளை விட ஆசிய நாடுகளிலேயே அதிகம் எனலாம். சிறுவர் வன்புணர்வு அநேகமாக வீடுகளில் சர்வ சாதாரணமாக அரங்கேறிக் கொண்டிருக்கிறது. வேலியே பயிரை மேய்ந்த கதையாக தம் உறவுகளாலேயே வன்புணர்வுக்கு பலியாகி கொண்டிருப்பது மிகவும் வேதனையான விடயம். தமது மாமன்,மைத்துனன், அண்ணன், தந்தை என்று அவர்கள் அறியாமலும், அறிந்தும் பலியாகிக் கொண்டிருக்கிறார்கள். இதில் சிறுமிகள் மட்டுமன்றி, சிறுவர்களும் பலியாகிறார்கள்.

இதில் மிகவும் கொடுமையான விடயம் ஆண் பிள்ளைகள் தன்னினச் சேர்க்கையாளர்களால் மிகவும் ஆபத்தான நிலைக்கு தள்ளப்படுவது தான். தாம் கல்வி கற்கும் பாடசாலைகளிலும், தாம் வாழும் சூழலிலும் தினம் பாலியல் தொல்லைகளுக்கு ஆளாகின்றனர். பெண் பிள்ளைகளும் இவ்வாறே பாதிப்புக்களை எதிர் நோக்குகின்றனர். மிரட்டல்கள், பயமுறுத்தல்,சின்ன அன்பளிப்புக்கள் மற்றும் குடும்ப வறுமைச் சூழல் காரணமாக இவர்கள் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகிறார் கள். இதில் வேதனையான விடயம் சில.

சிறுவர்கள் தமது தந்தை, தாய், சகோதரன், சகோதரி மற்றும் உறவுகளாலேயே பணத்திற்காக விற்கப்படுவது தான். தம்மை அறியாமலே தமது எதிர்காலத்தை இழந்து கொண்டிருக்கும் இந்த பிஞ்சுகளின் எதிர்காலம் கேள்விக்குறிதான்.

இக்காமக் கொடூரர்களிடம் அகப்படும் சில சிறுவர்கள் பாலியல் வன்புணர்வின் போது மிகவும் கொடூரமாக கொல்லப்படுவதன் மூலமே, உலகம் இப்படியான நிகழ்வுகளை அறிந்து கொள்வதோடு அதனை எதிர்க்கவும், தண்டிக்கவும் முற்படுகின்றது.

**பெற்றோரின் தவறு**

இத்தவறுகள் ஏன் தடுக்கப்படுவதில்லை. காரணம் இது தான். ஒவ்வொரு பெற்றோரும் தம்மைச் சுற்றியுள்ள உறவுகளை நம்புவதும், அவர்களின் பராமரிப்புகளில் தம் பிள்ளைகளை நம்பி விட்டுச் செல்வதும் தான். பதின்மூன்று வயதுகளிலேயே பிள்ளைகளின் உடலில் பருவ மாற்றங்கள் ஏற்படத் தொடங்கி விடுகின்றன. அவர்களின் மனநிலையும் மாற்றம் காண்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கான கண்காணிப்பு பெற்றோரின் கையிலேயே தங்கி உள்ளது.

பருவ வயதாகும்போது உங்கள் பிள்ளைகளுக்கான முதல் பாதுகாப்பு நீங்கள் மட்டும் தான். பிள்ளைகளை சிறைக் கைதிகள் போலவும், கல்வி கற்கும் இயந்திரங்களாகவும் மட்டும் பார்க்காமல் அவர்களோடு அன்பாகவும், நட்பாகவும் உறவா டுங்கள். அவர்களுக்கு பாலியல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொடுங்கள்.

பாலியல் என்பது அவமானமோ, அருவருக்கத்தக்க விடயமோ அல்ல என்பதை பெற்றோர் முதலில் உணர வேண்டும். பாலியல் பற்றிய புரிதலின் தவறுகள் தான் இப்படியான வன்புணர்வுகள் உருவாக காரணமாகின்றன. காமக் கொடூரர்களும் புரிதல் இல்லாத பாலியலினாலேயே உருவாக்கப் படுகிறார்கள். விழிப்புணர்வு அற்ற பாலியலினாலேயே இன்றுவரை இப்படியான நிகழ்வுகள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன.

**பிள்ளைகளின் எதிர்காலம் பெற்றோரின் கைகளில்**

நமது சமூக கண்ணோட்டம் தவறாக பார்ப்பதாலேயே இவ்வாறான தவறுகள் மூடி மறைக்கப்படுகின்றன. இது அவலமாகவும், பாதிக்கப்பட்ட பிள்ளைகள் பின்பு இழிச்சொல்லுக்கு ஆளாவதும் கூட இவ்வாறான தவறுகள் இடம்பெறக் காரணமாகின்றன. ஆகவே இவ்வாறான பாலியல் வன்முறைகளை முற்றுமுழுதாக நிறுத்த முடியாவிட்டாலும், தவறுகள் நிகழாத வண்ணம் தடுக்கலாம்.

இன்று கல்வியில் சிறந்தவர்கள் என்று நாம் மார்தட்டிக் கொண்டாலும், பாலியல் கல்வியில் பின்தங்கியவர்களாகவே இருக்கிறோம். இதைப் பற்றிய கருத்து சொல்பவர்களையே தப்பான கண்கொண்டு பார்க்கும் சூழலிலேயே நாம் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றமை தான் வேதனையான விடயம். சமூகத்தில் இவ்வாறான புல்லுருவிகள் உருவாக பெற்றோராகிய நாம் தான் முதன்மைக் காரணிகளாகிறோம். தோளுக்கு மேல் வளர்ந்தால் தோழன் என்பார்கள். உங்கள் பிள்ளைகளை தோழமையோடு நடத்துங்கள். அவர்கள் தப்பே பண்ண மாட்டார்கள். ஆக பெரியவர்கள் நாம் முதலில் எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.

உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் உங்கள் கைகளில். நாளைய எதிர்காலமும் உங்கள் கைகளில். சிறுவர் வன்கொடுமை தடுப்போம். சிறுவர்களைக் பாதுகாப்போம்.





# சிரியா விவகாரத்தால்

# அமெ. – ரஷ்ய போர் மூளுமா?

## நிபுணர்களின் எதிர்மாறான கருத்துக்கள்

'சிரியா மீது அமெரிக்கா தாக்குதல் நிகழ்த்தினால், உடனடியாக திருப்பித் தாக்காமல் விட மாட்டோம்'

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் கடந்த மார்ச் மாதம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் எடுத்த சபதம் இது.

டூமா நகரில் சிரியா அரசு நடத்திய தாகக் கூறப்படும் விஷ வாயுத் தாக்குலுக்குப் பிறகு, அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் போர் முழக்கம் செய்தபோதும், இதே பாணியில் ரஷ்யா கடுமையாக எச்சரித்தது.

ரஷ்ய ராணுவ தலைமைத் தளபதி வேலெரி ஜெராசிமோவ் ஒரு படி மேலே போய், 'சிரியாவில் ரஷ்யா நிலை கொண்டுள்ள அரசுக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமெரிக்கா ஏவுகணை வீசும் பட்சத்தில், அந்த ஏவுகணைகளை இடை மறித்து அழிக்கும் அதேசமயம் அவற்றை ஏவிய விமானங்கள், போர்க் கப்பல்களையும் தாக்கி அழிப்போம்' என்று வெளிப்படையாக மிரட்டல் விடுத்தார்.

புத்தம் புதிய, அதி நவீன ஏவுகணைகளை எதிர்கொள்ளத் தயாராகும்படி ரஷ்யாவுக்கு ட்ரம்ப் சவால் விடுத்த போது, கடுமையான பின்விளைவுகளைச் சந்திக்கத் தயாராகுங்கள் என ரஷ்யாவும் வார்த்தைகளைச் சொடுக்கியது.

அத்துடன் விட்டுவிடாமல், அமெரிக்க – ரஷ்ய அணு ஆயுதப் போருக்கு ரஷ்யா தனது மக்களைத் தயார்படுத்தியது.

### ரஷ்யாவின் இறுமாப்பு

இதன் மூலம், 'நாங்கள் எதற்கும் தயார்' என்ற சங்கதியை அமெரிக்காவுக்கும், மேற்கத்திய நாடுகளுக்கும் ரஷ்யா இறுமாப்புடன் சொன்னது.

இப்படி ஒரு புறம் போர்க்களம் சூடாகிக் கொண்டே போக, மறுபுறம் அமெரிக்கா சொன்னபடி தாக்குமா, அதற்கு விளாடிமிர் புடினின் பதிலடி எப்படி இருக்கும், மூன்றாம் உலகப் போர் மூளுமா என்றெல்லாம் விவாதக் களங்களும் கண்டபடி சூடுபிடிக்க ஆரம்பித்தன.

இந்த நிலையில், விஷ வாயுத் தாக்குதலுக்குப் பிறகு ஒரு வார காலமாக 'டுவிட்டரில்' மட்டுமே அம்பு விட்டுக் கொண்டிருந்த டொனால்ட் ட்ரம்ப், ஒரு வழியாக கடந்த சனிக்கிழமை சிரியாவில் நிஜமாகவே ஏவுகணை வீசினார்.

அமெரிக்காவுடன் சேர்ந்து, பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளும் தங்கள் பங்குக்கு சில ஏவுகணைகளைப் பறக்க விட்டன.

'விஷ வாயுத் தாக்குதல் நடத்தி, தங்கள் சொந்த மக்களையே கொன்று குவிக்கும் சர்வாதிகாரி அல் – ஆசாத்தின் இரசாயன ஆயுத பலத்துக்கு எதிரான மிகத் துல்லிய தாக்குதலை வெற்றிகரமாக செய்து முடித்துள்ளோம்' என்று டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க மக்களிடம் பெருமைப்பட்டுக் கொண்டார்.

இந்த பரபரப்பான சூழலில், அணு ஆயுதங்களை மலையாகக் குவித்திருக்கும் அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் சிரியாவை மையமாகக் கொண்டு நேரடிப் போர் மூளும் என்று பலர் அச்சம் தெரிவித்தனர்.



ஆனால், இத்தகைய பயம் தேவையே இல்லை என்கிறார்கள் பாதுகாப்பு நிபுணர்கள்.

### பதில் தாக்குதல் இல்லை

சொன்னபடியே சிரியாவில் அமெரிக்காவும், கூட்டணி நாடுகளும் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியிருந்தா லும், எதிர்பார்த்த மாதிரி ரஷ்யத் தரப்பிலிருந்து எதிர்த்தாக்குதல் எதுவும் நடைபெறாததை அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.



சிரியாவில் தாக்குதல் நடத்தினால் பதிலுக்குக் குண்டுகள் பாயும், போர் விமானங்கள், கப்பல்கள் அழிக்கப்படும் என்றெல்லாம் முழக்கமிட்ட ரஷ்யா, அமெரிக்கக் கூட்டுப் படை தாக்குதலுக்குப் பிறகு, 'இறையாண்மை கொண்ட ஒரு நாட்டில், அத்துமீறிய தாக்குதல்' என்ற கண்டனைக் கணைகளை வீசியதோடு நிறுத்திக் கொண்டது.

இதற்குக் காரணம், சிரியாவின் போர்க் களத்தில் எதிரெதிரே நின்றாலும், தங்களுக்கும் நேரடி மோதல் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் அமெரிக்காவும், ரஷ்யாவும் மிகக் கவனமாக இருப்பதுதான் என்கிறார்கள் விவரம் தெரிந்தவர்கள்.

உண்மையில், ஏவுகணைகளை வீசி விட்டு ட்ரம்ப் வீர வசனம் பேசினாலும், அந்தத் தாக்குதல் எதற்கும் உதவாத கண்துடைப்பு தான் என்கிறார்கள் அவர்கள்.

ரஷ்யர்களுக்கோ, ரஷ்ய ராணுவ தள வாடங்களுக்கோ துளியும் பங்கம் நேராமல், ஊருக்கு ஒதுக்குப் புறமாக மூன்றே மூன்று இரசாயன ஆயுத மையங்களை மட்டும் தேர்ந்தெடுத்து, அமெரிக்கக் கூட்டுப் படை தாக்குதல் நடத்தியிருக்கிறது.

### ஏமாற்று வேலை

இது, சிரியா அரசின் விஷ வாயுத் தாக்குதலுக்கு பதிலடியாக நாங்களும் ஏதோ செய்தோம் என்ற ஒரு திருப்தியை ஏற்படுத்துவதற்காகத்தானே தவிர, அந்தத் தாக்குதலால் சிரியா அரசின் இரசாயன ஆயுத பலத்துக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கும் என்ற நம்பிக்கை ஏவுகணை வீசிய கூட்டுப் படைக்கே இருக்காது என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

இன்னும், சொல்லப் போனால், எந்த நேரத்தில், எந்த இடத்தில் தாக்குதல் நடக்கப் போகிறது என்பதை ரஷ்யாவுக்கும், அதன் மூலம் சிரியாவுக்கும் ஏற்கெனவே தெரியப்படுத்திவிட்டுத்தான் இந்த ஏவுகணை வீச்சே நடத்தப்பட்டிருக்கும் என்கிறார்கள் ராணுவ விவகாரங்களை நன்கு அறிந்தவர்கள்.

இதில் நகைப்பை ஏற்படுத்தும் ஒரு விஷயம் என்னவென்றால், கடந்த 2015ஆம் ஆண்டில் சிரியா உள்நாட்டுப் போரில் ரஷ்யாவும் இறங்கிய பிறகு, ஏற்கெனவே அங்கு செயல்பட்டுக் கொண்டிருக்கும் அமெரிக்கக் கூட்டுப் படையினருக்கும், ரஷ்யப் படையினருக்கும் தவறான புரிதல்களால் மோதல் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக, தங்களது நடவடிக்கைகள் குறித்த தகவல்களை முன்கூட்டியே பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதற்கான நியதியை இரு தரப்பினரும் அப்போதே வகுத்துக் கொண்டுள்ளது தான்!


அந்த நியதியின்படி, கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தாக்குதல் குறித்து ரஷ்ய அதிகாரிகளிடம் பிரான்ஸ் ராணுவ அதிகாரிகள் முன்கூட்டியே தெரிவித்து விட்டார்கள் என்று ரஷ்யாவின் 'கொம்மர்சான்ட்' நாளிதழ் கூறுகிறது.

தற்போது அமெரிக்காவுக்கு எதிராக ரஷ்யா எந்த பதில் தாக்குதல் நடவடிக்கையும் எடுக்காததற்குக் காரணம், உண்மையிலேயே ரஷ்யாவின் சீற்றத்தைத் தூண்டும் வகையில் அமெரிக்கா எந்த நடவடிக்கையும் எடுக்காதது தான் என்கிறார்கள் நிபுணர்கள்.

> "விஷ வாயுத் தாக்குதல் நடத்தி, தங்கள் சொந்த மக்களையே கொன்று குவிக்கும் சர்வாதிகாரி அல் – ஆசாத்தின் இரசாயன ஆயுத பலத்துக்கு எதிரான மிகத் துல்லிய தாக்குதலை வெற்றிகரமாக செய்து முடித்துள்ளோம்' என்று டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க மக்களிடம் பெருமைப் பட்டுக் கொண்டார். இந்த பரபரப்பான சூழலில், அணு ஆயுதங்களை மலையாகக் குவித்திருக்கும் அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் சிரியாவை மையமாகக் கொண்டு நேரடிப் போர் மூளும் என்று பலர் அச்சம் தெரிவித்தனர்."

கடந்த 2017ஆம் ஆண்டில் இத்லிப் மாகாண விமான தளத்தில் அமெரிக்கா நடத்திய தாக்குதலுக்கும், தற்போது நடத்திய தாக்குதலுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்று கூறும் அவர்கள், அண்மையில் சிரியாவிலுள்ள ஈரான் நிலைகள் மீது இஸ்ரேல் நிகழ்த்திய தாக்குதலைப் போன்று ரஷ்யா நிலைகள் குறிவைக்கப்பட்டிருந்தால் நிலைமை வேறு மாதிரி ஆகியிருக்கும் என்கிறார்கள்.

நிபுணர்கள் கூறும் தகவல்களை வைத்துப் பார்க்கும்போது, சிரியாவி



லுள்ள ரஷ்ய நிலைகள் மீது அமெரிக்காவும், அமெரிக்காவின் நிலைகள் மீது ரஷ்யாவும் கை வைக்காதவரை, இரு நாடுகளுக்கும் இடையே நேருக்கு நேர் மோதல் ஏற்படாது; இப்போதைய சூழலில் அதற்கான வாய்ப்பே இல்லை என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

- நாகா



# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 29


தரம்-5

பகுதி - I

20) அமல், சுதன், சீதா, விது ஆகியோர் ஒரு பரீட்சைக்குத் தோற்றினார்கள். விதுவை விட 5 புள்ளிகள் கூடுதலாக அமல் பெற்றதுடன் சீதா சுதனை விட 10 புள்ளிகள் குறைவாகப் பெற்றிருந்தாள். விதுவும் சீதாவும் சமனான புள்ளிகளை பெற்றிருந்தனர். ஆகக் கூடிய புள்ளிகளை பெற்றவர் யார்?
1. சீதா 2. அமல் 3. சுதன்

21) சீதா பெற்ற புள்ளிகளின் மொத்தம் 48 எனின் அமல் பெற்ற புள்ளிகளின் எண்ணிக்கை?
1. 43 2. 53 3. 56

22) முழு உருவத்தின் சுற்றளவிலும் நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாக தருக?



1. 5/1
2. 1/5
3. 2/5

23) 12 மனிதர்கள் 6 நாள்களில் செய்யும் வேலையொன்றை 4 மனிதர்கள் எத்தனை நாள்களில் செய்து முடிப்பர்?
1. 18 நாள்களில் 2. 14 நாள்களில் 3. 20 நாள்களில்

24) 10 m நீளமான கயிற்றுத் துண்டொன்று இரு சம பகுதிகளாக வெட்டப்பட்டு மீண்டும் இரு சம பகுதிகளாக வெட்டப்பட்டன எனின் சிறிய துண்டொன்றின் நீளம் என்ன?
1. 400 cm 2. 250 cm 3.100 cm

25) வீதி ஒன்றின் 4m இடைவெளியில் நேரான பாதையில் 12 கொடிகள் நடப்பட்டன. முதலாவது கொடிக்கும் இறுதிக் கொடிக்கும் இடையிலான தூரம் எவ்வளவு?
1. 56 m 2. 44m 3. 50m

26) வகுப்பிலுள்ள மாணவர்களில் ஒவ்வொரு 5 பேருக்கும் 2 பேர் பரீட்சை எழுதவில்லை என அறியப்பட்டது. அதன்படி பரீட்சை எழுதியவர்கள் 20 பேர் எனில் அவ் வகுப்பிலுள்ள மொத்த மாணவர்கள் எத்தனை பேர்?
1. 30 2. 28 3.45

27) சமன் ஒரு புத்தகத்தில் 20 பக்கங்களை வாசித்துள்ளான். இன்னும் வாசிப்பதற்கு வாசித்த பக்கங்களைப் போல 3 மடங்கு உள்ளது. எனின் புத்தகத்தின் பக்கங்களின் மொத்த எண்ணிக்கை?
1. 80 2. 60 3.40

28) கீழே தரப்பட்ட வாக்கியங்களில் எழுத்துப் பிழையற்ற வாக்கியங்களை தெரிவு செய்க?
1. மரத்திலிருந்து கிலி பறந்தது
2. கன்னகி அழகிற் சிரந்தவள்
3. தாயிற் சிறந்த கோயிலில்லை

29) இரண்டின் மூன்று மடங்கும் மூன்றின் இருமடங்கும் நான்கின் நான்கு மடங்கும் கொண்ட எண்களின் கூட்டுத்தொகை?
1. 28 2. 24 3. 22

30) சுமனின் தற்போதைய வயது அவனது தந்தையின் வயதின் 1/5 பங்காகும். சுமனின் வயது 8 எனின், தந்தையின் வயது யாது?
1. 30 2. 40 3.6

31) 2009 ஆம் ஆண்டில் 365 நாள்கள் உள்ளன. அவ்வாண்டில் எத்தனை வியாழக்கிழமைகள் உள்ளன?
1. 48 2. 50 3. 53

32) குமரன் அன்னாசிப் பழத்தை மட்டும் விரும்புகிறான். மாறன் அன்னாசிப் பழத்தையும் வாழைப்பழத்தையும் விரும்புகிறான். அருண் வாழைப்பழத்தை மட்டும் விரும்புகிறான். இங்கு வாழைப்பழத்தை விரும்புகிறவர்கள் எத்தனை பேர்?
1. 3 2. 2 3. 1

கபில், குகன், குமரன் ஆகிய மூவரும் நண்பர்கள். இவர்கள் மூவரும் பள்ளிறமாபிள் வைத்திருக்கின்றனர்.
- மூவரிடமும் உள்ள மொத்த மாபிள்கள் 1000 ஆகும்.
- ஒவ்வொருவரும் 300 இற்கு மேல் மாபிள்கள் வைத்துள்ளார்கள்
- ஒருவரிடம் மாத்திரம் இரட்டை எண்ணிலே மாபிள் உள்ளது
- மூவரிடமும் சமனான எண்ணிக்கையில் மாபிள் இல்லை

33) கபிலிடம் 350 மாபிள்கள் இருப்பின் ஏனைய இருவரிடமும் இருக்கக் கூடிய மாபிள்கள் எத்தனை?
1. 340 உம் 310 உம் 2. 320 உம் 370 உம் 3. 350 உம் 340 உம்

34) குமரனை விட குகன் 30 மாபிள்கள் கூடுதலாக வைத்திருப்பின் மற்றைய இருவரிடமும் உள்ள மாபிள்களின் மொத்த எண்ணிக்கை யாதாகும் ?
1. 650 2. 670 3. 660


35) 29 ஆவது ஒலிம்பிக் போட்டி 2008 ஆம் ஆண்டு நடைபெற்றது. 33 ஆவது ஒலிம்பிக் போட்டி எத்தனையாம் ஆண்டு நடைபெறும்?
1. 2020 2.2026 3.2004

36) இரு எண்களின் கூட்டுத்தொகை 45 ஆகும். இவ் எண்களுக்கான வித்தியாசம் 15 ஆகும். இவ்விரு எண்களும் யாவை ?
1. 20 உம் 25
2. 15 உம் 30 உம்
3. 10 உம் 35 உம்




# சிறுவர் பொய்கை

அன்றாட வாழ்வின் சாதாரண விஷயங்களையும், அசாதாரண முறையில் செய்யும் போது உலகின் கவனத்தை உன் மீது திருப்ப முடியும்
-ஜார்ஜ் வாஷிங்டன் கார்வர்



## சித்திரம் வரைந்து பார்ப்போம்!




## வாழ்க்கைப் பயணம்

அமெரிக்க தொழிலதிபரான ராக்ஃபெல்லர், முதுமையிலும் கடுமையாக உழைத்தவர். ஒருமுறை, விமானத்தில் பயணித்தார். அப்போதும் ஏதோ வேலையாக இருந்தவரைக் கண்டு அருகில் இருந்த இளைஞர் வியப்புற்றார். அவர், ”ஐயா, இந்த வயதிலும் இப்படிக் கடுமையாக உழைக்கத்தான் வேண்டுமா? ஏகப்பட்ட சொத்து சேர்த்து விட்டீர்கள்... நிம்மதியாக சாப்பிட்டு, ஓய்வெடுக்கலாமே?!” என்று ராக்ஃபெல்லரிடம் கேட்டார்.

உடனே ராக்ஃபெல்லர், “விமானி இந்த விமானத்தை இப்போது நல்ல உயரத்தில் பறக்க வைத்து விட்டார். விமானமும் சுலபமாகப் பறக்கிறது. அதற்காக... இப்போது எஞ்ஜினை அணைத்து விட முடியுமா? எஞ்ஜினை அணைத்து விட்டால் என்னவாகும் தெரியுமா?” என்று கேட்டார்.

“பெரும் விபத்து நேருமே!”– பதற்றத்துடன் பதிலளித்தான் இளைஞன்.

இதைக் கேட்டுப் புன்னகைத்த ராக்ஃபெல்லர், வாழ்க்கைப் பயணமும் இப்படித்தான். கடுமையாக உழைத்து உயரத்துக்கு வர வேண்டியுள்ளது. வந்தபிறகு,‘உயரத்தைத்தொட்டு விட்டோமே...’ என்று உழைப்பதை நிறுத்தி விட்டால், தொழிலில் விபத்து ஏற்பட்டு விடும். உழைப்பு என்பது வருமானத்துக்காக மட்டுமல்ல, உடல் ஆரோக்கியம் மற்றும் மன நிம்மதிக்காகவும்தான்!’’ என்று விளக்கம் அளித்தார்.





## தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் ‘கல்விக்கதிர்’ வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : ‘காலைக்கதிர்’
சிறுவர் சஞ்சிகைப் பிரிவு
30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

# ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் சகல மோசடிகளையும் வெளிப்படுத்துவேன்!

கொழும்பு, ஏப். 20
ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் சகல மோசடி நடவடிக்கைகளையும் அம்பலப்படுத்த உள்ளேன் எனப் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

சமூக வலுவூட்டல் அமைச்சில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெற்ற அனைத்து ஊழல் மோசடிகள் பற்றிய விவரங்கள் ஆவணங்கள் என்னிடம் உண்டு.

இந்த விடயங்கள் பற்றி நான் விரைவில் நாட்டு மக்களுக்கு அம்பலப்படுத்துவேன்.



பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க

கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடி மத்திய வங்கி பிணை முறி மோசடிகளை விடவும் ஆபத்தானது.

இந்த மோசடிகள் தொடர்பில் விசாரணை நடத்தும் அனைத்து தரப்புக்களிடமும் முறைப்பாடு செய்வேன்.

விசாரணைகளுக்கு பாதகம் ஏற்படும் என்ற காரணத்தினால் யார் யார் தொடர்புபட்டுள்ளார்கள் என்பது பற்றிய விடயங்களை அம்பலப்படுத்தப் போவதில்லை.

குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நபர்கள் முனிவர்களைப் போன்று காலத்தைக் கழிக்கின்றார்கள்.

இதில் சில விளையாட்டுத்துறை அமைச்சர்களும் உள்ளடங்குகின்றார்கள்.

கிரிக்கெட் நிறுவனத்தின் மோசடிகளை அம்பலப்படுத்திக் கிரிக்கெட்டை நேசிக்கும் மக்களுக்கு நியாயத்தை வழங்க வேண்டுமென ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

## பண்டிகைக் கால ரயில் சேவை மூலம் ரூ.65 லட்சத்திற்கும் அதிக இலாபம்!



பண்டிகைக் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட ரயில் சேவை மூலம் ரூபா 65 லட்சத்திற்கும் அதிக லாபம் ஈட்டப்பட்டுள்ளது.

இம்மாதம் 7 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்த இலாபம் பெறப்பட்டுள்ளது என ரயில்வே திணைக்களத்தின் பிரதி வணிக அத்தியட்சகர் என்.ஜே. இத்திபொலகே தெரிவித்துள்ளார்.

அனைத்து ரயில் நிலையங்களிலும் இரண்டு லட்சம் முதல் ஐந்து லட்சம் வரை வருமானம் அதிகரித்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பயணிகளின் கோரிக்கைக்கு அமைய இன்று முதல் மீண்டும் விசேட ரயில் சேவைகளை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பண்டிகை காலத்தில் இலங்கை போக்குவரத்து சபை ஆறு கோடி ரூபாவிற்கும் அதிக லாபத்தை ஈட்டியுள்ளது என்றும் பயணிகளின் நலன் கருதி தொடர்ந்தும் ஆயிரத்து 500 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன எனவும் இலங்கை போக்குவரத்து சபையின் நடவடிக்கை பிரிவின் பிரதம அத்தியட்சகர் சரத் வல்கம்பாய தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காலி மாவட்டத்தில் கிராம சக்தி செயற்றிட்டம்!

கொழும்பு, ஏப். 19
காலி மாவட்டத்தில் கிராம சக்தி செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கடந்த வருடம் ஒரு கோடி 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி செயலகம் தேவையான நிதியை வழங்கியுள்ளது.

மாவட்டத்தின் 19 பிரதேச செயலகப் பிரிவுகளில் 139 அபிவிருத்தி செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப் படுகின்றன என காலி மாவட்ட செயலகத்தின் திட்டமிடல் பிரிவு தெரிவித்துள்ளது.

## யாழில் முதல்தரச் சந்தையாக மருதனார்மடம் சந்தை மாறும்



பிரதேச சபைத் தலைவர் தர்சன் உறுதியளிப்பு

சுன்னாகம், ஏப்.20
யாழ். மாவட்டத்திலே நவீன வசதிகளுடன் கூடிய முதல்தர அதிக வருமானம் ஈட்டுகின்ற சந்தையாக மருதனார்மடம் பொதுச்சந்தை எமது ஆட்சிக்காலத்தில் மாற்றியமைக்கப்படும் என வலி. தெற்கு பிரதேச சபையின் தலைவர் க.தர்சன் தெரிவித்துள்ளார்.

பிரதேசசபையின் மருதனார்மடம் பொதுச்சந்தைக்கு பிரதேச சபையின் தவிசாளர் க.தர்சன் கள விஜயம் செய்திருந்தார்.

இதன்போது பிரதேச சபையின் உடுவில் அலுவலக பொறுப்பதிகாரி, தொழில்நுட்ப உத்தியோகத்தர், சந்தை மேற்பார்வையாளர், வருமானப் பரிசோதகர் ஆகியோரும் சென்றிருந்தனர்.

அங்கு வியாபாரத்தில் ஈடுபடுகின்ற வியாபாரிகளுடனும் நுகர்வோருடனும் சந்தையின் மேம்பாடு தொடர்பாக கலந்துரையாடினார்.

யாழ் மாவட்டத்திலே அதிக வருமானத்தை ஈட்டுவதில் இரண்டாம் இடத்தில் இருக்கின்ற மருதனார்மடம் பொதுச்சந்தை வியாபாரிகளுக்கும் நுகர்வோருக்கும் சௌகரியமான வசதிகளோடு அமைக்கப்பட்டு யாழ்மாவட்டத்திலேயே முதல் நிலை பொதுச்சந்தையாக மாற்றியமைக்கப்படும் எனவும் தவிசாளர் க.தர்சன் உறுதியளித்துள்ளார்.

இதன்போது கிணறு, மலசலகூடம் புனரமைத்தல் மற்றும் திண்மக்கழிவகற்றல் போன்றன உடனடியாக நிவர்த்தி செய்யப்படும் எனவும் தவிசாளர் தெரிவித்தார். (இ)

## நினைவஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.20
அண்மையில் ஆஸ்திரேலியாவில் காலமான இடதுசாரி இயக்கத் தோழரும் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் ஆசிரியருமான பானுதேவனின் நினைவஞ்சலிக் கூட்டம்–

நாளைமறுதினம் ஞாயிறு மாலை 4 மணிக்கு யாழ். நூலக சிற்றூண்டி மண்டபத்தில் வண.பிதா ஜெயசீலன் அடிகளார் தலைமையில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் இலங்கை ஆசிரிய சங்க முன்னாள் தலைவர் (வடக்கு) மு.தியாகராஜா, வடபிரதேச தொழிற்சங்க கூட்டுக் குழுவின் முன்னாள் செயலாளர் சா.தியாகலிங்கம், ஓய்வுநிலை வங்கி ஊழியர் கோ.சிவபாலன் ஆகியோர் உரையாற்றுவர். (இ)





## லண்டன் விகாரையில் ஜனாதிபதி வழிபாடு

கொழும்பு, ஏப். 20
பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ள லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கிங்ஸ் பெரியில் உள்ள ஸ்ரீ சத்தாதிஸ்ஸ பௌத்த மத்திய நிலைய விகாரைக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்துள்ளார்.

பௌத்த மத்திய நிலையத்துக்குச் சென்ற ஜனாதிபதி, விகாராதிபதி அக்கமஹா பண்டித கலயாயே பியதிஸ்ஸ தேரரைச் சந்தித்துள்ளார்.

இதன் பின்னர் விகாரையில் நடைபெற்ற வழிபாடுகளிலும் ஜனாதிபதி கலந்துகொண்டார்.

## கட்சிச் சாயங்கள் இனித் தேவையில்லை மக்கள் சேவையால் கௌரவம் பெறுவோம்

### நல்லூர் பிரதேச சபை கன்னியமர்வில் உறுப்பினர் மதுசுதன்

நல்லூர், ஏப்.20
நாம் அனைவரும் மதிப்புக்குரிய மக்களால் தெரிவு செய்யப்பட்டு இப் பெறுமதியான சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளோம், மக்களுக்கான சேவையை ஆற்ற அனைத்து உறுப்பினர்களும் ஒன்றுபட்டு நிற்போம். இனி இது ஒரு மக்கள் சேவைக்குடும்பம். இங்கு கட்சிச் சாயங்கள் இனித் தேவையில்லை. இங்கு அரசியல் செய்யத் தேவையில்லை. மக்கள் சேவையே மகத்தானது. அச் சேவையாலேயே இச் சபை மேலும் கௌரவம் பெறும். அதனோடு நாமும் கௌரவம் பெறுவோம்.

- இவ்வாறு குறிப்பிட்டார் பிரதேச சபை உறுப்பினர் கு.மதுசுதன்.

நல்லூர் பிரதேச சபையின் கன்னி அமர்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. அங்கு உரையாற்றிய மதுசுதன் கூறியவை வருமாறு–

கழிவு முகாமைத்துவத்தில் மேற்பட்டப்படிப்பு மேற்கொண்டவன் என்ற ரீதியில் திண்மக் கழிவகற்றலில் அதி நவீன தொழில்நுட்பங்களைக் கையாண்டு கழிவுகளை முகாமை செய்வதோடு அதன் மூலம் வருமானம் ஈட்டவும் வழி வகைகளை முன் வைப்பேன்.

மக்களுக்கு பயன்பாடுடைய குறுகிய கால, நீண்ட கால திட்டமிடல்களைச் செயற்படுத்தி நாட்டின் சிறந்த சபையாக நல்லூர் பிரதேச சபையை மாற்ற நாம் அனைவரும் ஒன்றுபட்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றுவோம்.


நம் இனத்தின் மீள் எழுச்சிக்கு கல்வி மிகமிக முக்கியமானது. கல்விக்காகவும் மேலும் பிரதேசத்தின் அபிவிருத்திக்காகவும் அனைத்து விதத்திலும் எனது தூய்மையான பங்களிப்பு அமையும் என உறுதிப்படுத்திக் கூற விரும்புகின்றேன்.

கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் முகமாக எனது முதலாவது சம்பளத் தொகையை என் வட்டாரத்தின் கல்வி உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு அளிக்கவுள்ளேன் என இந்த கௌரவ சபையில் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.- என்றார். (இ)

# இந்தோனேஷியாவில் நிலநடுக்கம்; ரிச்டரில் அளவுகோலில் 5.3 ஆக பதிவு

ஜகார்த்தா, ஏப். 20

இந்தோனேஷியாவில் உள்ள சவும்லக்கி தீவில் நேற்று முன்தினம் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவுகோலில் 5.3 ஆக பதிவாகியுள்ளது.



இந்தோனேஷியா நாடு பல்வேறு தீவுகளைக் கொண்டது. இது அதிக அளவில் நிலநடுக்கம் ஏற்படும் நெருப்பு வளையப் பகுதியில் அமைந்துள்ளது. இதனால் அடிக்கடி பூகம்பம் ஏற்பட்டு வருகிறது. கடந்த திங்கட்கிழமை அதிகாலை மொலுகாஸ் பகுதியில் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. கடலுக்கு அடியில் 36 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்நிலையிலேயே, இந்தோனேஷியாவில் உள்ள சவும்லக்கி தீவில் நேற்று முன்தினம் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 5.3 ஆக அது பதிவாகியுள்ளது.

நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கியுள்ளன. இதனால், மக்கள் வீடுகளிலிருந்து வெளியேறி தெருக்களில் தஞ்சம் புகுந்தனர். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து எந்த தகவலும் வெளியாகவில்லை.

### ஆப்கனில் வெடி குண்டுத் தாக்குதல்:

## பொலிஸ் கொமாண்டருடன் மேலும் நால்வர் உயிரிழப்பு



காபூல், ஏப். 20

ஆப்கானிஸ்தானில் காந்த காரில் இடம்பெற்ற வெடிகுண்டுத் தாக்குதல் பொலிஸ் கொமாண்டர் உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் பொலிஸ் கொமாண்டராக பணியாற்றிய ஜனான் மமா நேற்றுக் காலை தனது பாதுகாவலர்களுடன் சென்று கொண்டிருந்தார்.

அப்போது அவரது வாகனம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது. இந்த தாக்குதலில் ஜனான் மமா, அவரது பாதுகாவலர்கள் 3 பேர் மற்றும் பொதுமக்களில் ஒருவர் என மொத்தம் ஐந்து பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகியுள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு தலிபான் பயங்கரவாத அமைப்பினர் பொறுப்பேற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டனில் உள்ள தமிழர்கள் மோடிக்கு எதிராக போராட்டம்

லண்டன், ஏப். 20

பிரதமர் மோடிக்கு எதிராக பிரிட்டனில் தமிழர்கள் போராட்டம் மேற்கொண்டுள்ளனர்.

காவிரி மேலாண்மை சபை அமைக்காததை கண்டித்து பிரதமர் மோடிக்கு எதிராக லண்டனிலும் தமிழர்கள் ‘கோ பேக் மோடி’ என கோஷங்களை எழுப்பினர்.

தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காக்கும் காவிரி மேலாண்மை சபை அமைக்காத, பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடைபெற்று வருகிறது.

கடந்த 12ஆம் திகதி பிரதமர் மோடி தமிழகம் வந்தபோதும் போராட்டம் நடைபெற்றது. எதிர்க்கட்சிகள், அமைப்புகள் மற்றும் பொதுமக் கள் என பல தரப்பிலும் கறுப்புக் கொடி காட்டி போராட்டம் நடத்தப்பட்டது.




சமூக வலைதளங்களிலும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. GoBackModi என்ற ஹேஷ்டேக் உலக அளவில் ட்ரெண்டிங் ஆனது.

இந்நிலையில், கொமன்வெல்த் நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்ள பிரதமர் மோடி பிரிட்டன் சென்றுள்ளார். லண்டன் நகரில் ஒன்று கூடிய தமிழர்கள் பிரதமர் மோடிக்கு எதிராக ‘கோ பேக் மோடி’ என கோஷம் எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், அங்கு பரபரப்பு ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சி.ஐ.ஏவின் இயக்குநராக கினா ஹஸ்பெல் நியமனம்

வொஷிங்டன், ஏப். 20

அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏவின் அடுத்த இயக்குநராக கினா ஹஸ்பெலை அதிபர் டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் முறைப்படி நியமித்தார்.



அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த ரெக்ஸ் டில்லர் சனைஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த மாதம் அதிரடியாக பதவி நீக்கம் செய்தார். இதைத் தொடர்ந்து, அந்த பதவிக்கு சி.ஐ.ஏவின் இயக்குநர் மைக் போம்பியோ நியமிக்கப்பட்டார்.

அத்துடன், சி.ஐ.ஏவின் துணை இயக்குநர் கினா ஹஸ்பெலை, புதிய இயக்குநராக நிய மிப்பது தொடர்பான அறிவிப்பை, சுட்டுரை வாயிலாக ட்ரம்ப் வெளியிட்டார்.

இந்த நிலையில், கினா ஹஸ்பெல் நியமனம் தொடர்பான அறிக்கை அமெரிக்க நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப்பட்டது.

## 72 வயது மூதாட்டி ஒருவரைக் காதல் திருமணம் செய்த 19 வயது இளைஞர்

72 வயது மூதாட்டி ஒருவரை 19 வயது இளைஞர் காதல் திருமணம் செய்த சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் டென்னிசி பகுதியில் உள்ள மேரிவில்லேவை சேர்ந்தவர் அல்மேடா (வயது – 72). இவர் கடந்த 2016ஆம் ஆண்டிலிருந்து தனது கணவரை பிரிந்து வாழ்ந்து வந்தார்.

அதன் பின்னர் ஒரு பிறந்த நாள் கொண்டாட்டத்தில் கேரி ஹார்ட்விக் என்ற 19 வயது இளைஞரைச் சந்தித்துள்ளார். அந்த நபருடன் அல்மேடாவுக்கு நட்பு ஏற்பட்டது.

இந்த நட்பானது பின்னர் காதலாக மாறியுள்ளது. இருவரும் ஒருவரையொருவர் உயிராக நேசிக்க ஆரம்பித்தனர். இதையடுத்து அல்மேடாவும், கேரியும் திருமணம் செய்ய முடிவெடுத்தனர்.



முதலில் இதற்கு இருவர் குடும்பத்திலும் எதிர்ப்பு எழுந்தது. அதற்கு காரணம் அவர்கள் இருவருக்கும் இடையேயான வயது வித்தியாசமாகும். இதனிடையே குடும்பத்தினரை ஒரு வழியாக அவர்கள் சமாதானப்படுத்தி திருமணம் செய்து கொண்டனர். கேரிக்கும், அல் மேடாவுக்கும் இடையில் 58 வயது வித்தியாசம் இருந்தாலும் இருவரும் மிக மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகிறனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### காஷ்மீரில் சிறுமி பலாத்காரம், கொலை:

## ‘மனித சமூகத்துக்கு ஆபத்தானது’ ஐக்கியநாடுகள் சபை கண்டனம்

நியூயோர்க், ஏப். 20

காஷ்மீரில் மாநிலம் கதுவா பகுதியில் 8 வயதுச் சிறுமி பலாத்காரம் செய்து கொலை மற்றும் உத்தர பிரதேச மாநிலம் உன்னாவில் பெண் வன்புணர்வு சம்பவங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் அமைப்பும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கியநாடுகள் சபை பெண்கள் அமைப்பின் தலைவியான மிலம்போ– நகோடா தெரிவித்தவை வருமாறு:–

காஷ்மீர் மாநிலத்தில் சிறுமி பலாத்காரம் கொலை செய்யப்பட்ட சம்பவம் மற்றும் உத்தர பிரதேசத்தில் நடந்த பெண் வன்புணர்வு சம்பவங்கள் கண்டனத்துக்குரியனவாகும். இந்த



சம்பவங்களுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்து உள்ளார். இது போன்ற சம்பவங்கள் மனித சமுதாயத்துக்கே ஆபத்தானது ஆகும்.

இந்த சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் அது அனைத்து மனித சமுதாயத்துக்கும் எச்சரிக்கை விடுக்கும் பொறுப்பில் இருந்து நாம் விலகுவதாக அமையும். இந்த செயலில் ஈடுபடுபவர்கள் மீது எடுக்கப்படும் சட்ட ரீதியிலான தண்டனைகள் மூலமே வன்புணர்வு – கொலை இல்லாத நிலை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## சுஷ்மா சுவராஜின் சீனாவுக்கான பயணம்; அரசியல் நம்பிக்கையை மேம்படுத்தும்!

இந்திய வெளிவிவகார துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜின் சீன பயணம் இரு நாடுகளுக்கு இடையேயான அரசியல் நம்பிக்கையை மேம்படுத்தும் என சீனா தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் எதிர்வரும் 21ஆம் திகதி சீனாவுக்கு 4 நாள்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். அவர் 22 ஆம் திகதி சீன வெளியுறவு அமைச்சர் வாங் யீ உடன் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இதுபற்றி சீன வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பு அதிகாரி ஹுவா சன்யிங் தெரிவித்தவை வருமாறு:–




சுவராஜின் பயணம் இரு நாடுகளுக்கு இடையேயான அரசியல் நம்பிக்கையை வலுப்படுத்துவதோடு இரு நாடுகளின் உயர் மட்ட திட்ட ஒத்துழைப்பு நட்புறவை மேம்படுத் தும். இந்த சந்திப்பில் இருதரப்பு உறவுகள், சர்வதேச மற்றும் மண்டல விவகாரங்கள் ஆகியவை பற்றிய விடயங்கள் பரிமாறிக் கொள்ளப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.


கடந்த வருடம் டோக்லாம் பகுதியில் சீனா வீதி அமைக்கும் பணியில் ஈடுபட்டதற்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்தது. இதனைத் தொடர்ந்து இரு நாடுகளும் தங்களது இராணுவ வீரர்களை அந்த பகுதியில் நிறுத்தின.

இந்த விவகாரத்தினால் முறிவடைந்த இரு நாடுகளின் உறவுகளை மீண்டும் கட்ட மைப்பது மற்றும் பிற விவகாரங்களை முன்னெடுத்து செல்லும் முயற்சிகளை இரு தலைவர்களும் மேற்கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir



# பாலியல் பலாத்காரத்தை வைத்து அரசியல் செய்யாதீர்கள்!


லண்டனில் மோடி

லண்டன், ஏப். 20

பாலியல் வன்கொடுமை செய்வது சமூகத்திற்கு எதிரான மிகப்பெரிய குற்றம். இதனால், நாட்டிற்கு அவமானம் ஏற்பட்டுள்ளது. இதை வைத்து அரசியல் செய்யக்கூடாது என பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

காஷ்மீர் கதுவாவில் 8 வயது சிறுமி 7 நாள்கள் கூட்டுப் பலாத்காரத்துக்கு ஆளான நிகழ்வு நாட்டையே உலுக்கியது. இதேபோல, உத்தப்பிரதேசம் உன்னாவ் நகரில் இளம் பெண்ணை பா.ஜ.கவின் எம்.எல்.ஏ. உள்ளிட்ட சிலர் பாலியல் பலாத்காரம் செய்தனர் என புகார் எழுந்துள்ளது. இதுபற்றி விசாரணை நடைபெற்று வருகிறது.

கதுவா, உன்னாவ் சம்பவத்தின் அதிர்வலைகள் அடங்குவதற்குள் சூரத் நகரில் 11வயது சிறுமி பலாத்காரத்துக்கு ஆளாக்கப்பட்டார். சூரத் நகரின் பேஸ்டான் நகரில் கிரிக்கெட் மைதானம் அமைந்துள்ள பகுதியில் 11 வயது மதிக்கத்தக்க சிறுமியின் உடலை பொலிஸார் கண்டெடுத்தனர்.

அடுத்தடுத்த பாலியல் பலாத்கார சம்பவங்கள் நாடுமுழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளன. கதுவா சம்பவம் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியதையடுத்து, நீதி கிடைக்கும், குற்றவாளிகள் யாரும் தப்ப முடியாது என பிரதமர் மோடி கூறியிருந்தார்.

இந்த நிலையில் பாலியல் பலாத்கார சம்பவங்களுக்கு பிரதமர் மோடி மீண்டும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். பிரதமர் மோடி, லண்டனில் இந்திய வம்சாவளியினர் மத்தியில் பேசினார்.

இதன்பாது அவர் மலும் தெரிவித்தவை வருமாறு:-

பாலியல் வன்கொடுமை என்பது மிகப்பெரிய குற்றச்செயல். பாலியல் வன்கொடுமை என்பது பாலியல் வன்கொடுமைதான். இதை எவ்வாறு நம்மால் ஏற்றுக் கொள்ள முடியும்? இந்தப் பிரச்சினையில் அரசியல் செய்யக்கூடாது. இது போன்ற கொடுகளை கடந்த காலங்களில் நடந்த சம்பவங்களுடன் ஒப்பிட்டு பேசி அரசியல் செய்யக்கூடாது.

இதுபோன்ற பாலியல் வன்கொடுமைகள் நாட்டை அவமானப்பட வைத்துள்ளது. தேசத்திற்கே அவமானம் தரக்கூடியது. இந்தியா அமைதி மீது நம்பிக்கை வைத்துள்ளது.

அதேசமயம், பயங்கரவாதத்தை பொறுத்துக் கொள்ள முடியாது. இந்தியர்களை கொல்ல பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. என்றும் அவர் தெரித்துள்ளார்.

பாலியல் பலாத்காரத்துக்குப் பின் கொலையுண்ட

## சிறுமியின் அடையாளத்தை வெளியிட்ட ஊடகங்களுக்கு ரூ.10 லட்சம் அபராதம்

ஜம்மு - காஷ்மீர் மாநிலம், கதுவாவில் பாலியல் பலாத்காரத்துக்கு ஆளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட 8 வயது சிறுமியின் பெயர் புகைப்படம் உள்ளிட்ட அடையாளங்களை வெளியிட்ட ஊடகங்களுக்கு தலா 10 லட்சம் இந்திய ரூபா அபராதம் விதித்து டில்லி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கதுவாசம்பவத்தில், சிறுமியின் பெயர், புகைப்படம், குடும்ப விவரங்கள் உள்ளிட்ட அடையாளங்கள் ஊடகங்களில் வெளியான விவகாரத்தை டில்லி உயர் நீதிமன்றம் தாமாக விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. பின்னர், இது தொடர்பான விளக்கம் கோரி 12 ஊடகங்களுக்கு உயர் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியது.

அதில் 9 ஊடக நிறுவனங்களின் வழக்குரைஞர்கள், தலைமை நீதிபதி கீதா மிட்டல், நீதிபதி சி.ஹரி சங்கர் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் நேற்று முன்தினம் ஆஜராகினர்.

அப்போது, இந்த விவகாரத்தில் தவறு நடைபெற்றுவிட்டது என்றும் அதற்காக மன்னிப்பு கோருகிறோம் என்றும் ஊடகங்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனங்கள் 10 லட்சம் ரூபா அபராதத் தொகையை செலுத்த நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

உயர் நீதிமன்ற தலைமைப் பதிவாளரிடம் ஒரு வாரத்துக்குள் அபராதத்தை செலுத்த வேண்டும். அந்த தொகையானது, ஜம்மு - காஷ்மீர் சட்ட சேவைகள் ஆணையத்துக்கு மாற்றப்பட்டு, அந்த மாநிலத்தில் பலாத்காரத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான இழப்பீட்டுத் திட்டத்துக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்று நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

மேலும், பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாகும் சிறார்களின் அடையாளங்களை வெளியிடுவது, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களைத் தடுக்கும் சட்டத்தின்கீழ் 2 ஆண்டு சிறைத் தண்டனை மற்றும் அபராதத்துடன் கூடிய குற்றமாகும். இதுதொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும் என்றும் நீதிபதிகள் குறிப்பிட்டனர்.


## செய்தித் துளிகள்!



மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு 37 கன அடியில் இருந்து 48 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையின் நீர்மட்டம் 35.43 அடியாகவும், நீர்இருப்பு 9.85 டி.எம்.சியாகவும் உள்ளது. அணையில் இருந்து குடிதண்ணீருக்காக விநாடிக்கு 500 கனஅடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்டம் ஊட்டி தாவரவியல் பூங்காவில், மே மாதம் 18,19,20 ஆகிய திகதிகளில் மலர் கண்காட்சி நடைபெற இருக்கின்றது. இந்த மலர் கண்காட்சிக்காக தயார் செய்யப்பட்ட 15 ஆயிரம் மலர் தொட்டிகளில் பூக்கள் மலரத் தொடங்கி உள்ளன.





ரஜனி, அடுத்த மாதம் அமெரிக்கா செல்ல உள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. சமீபத்தில் இமயமலை பயணம் மேற்கொண்டிருந்த ரஜனி, விரைவில் அமெரிக்கா செல்லவிருக்கிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தா மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் காற்றால் நேரிட்ட விபத்துகளில் 18 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்துக்களில் 50 பேர் காயமடைந்தனர்.



## பா.ஜ.கவை எதிர்கொள்ள ஜனநாயக சக்திகள் ஒன்றிணையும்

### மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தெரிவிப்பு

பா.ஜ.கவை எதிர்கொள்வதற்காக ஜனநாயக சக்திகள் ஒன்றிணைந்து போராடுவதற்கான வழிமுறைகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடு கொடுக்கும் என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சீதாராம் யெச்சூரி கூறியுள்ளார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் 22 ஆவது மாநாடு, ஹைதராபாதில் நேற்று முன்தினம் தொடங்கியது. 5 நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டில், அடுத்த 3 ஆண்டுகளுக்கான திட்டங்கள் வகுக்கப்படவுள்ளன. மக்களவைத் தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற இருப்பதால், இந்த மாநாடு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

பா.ஜ.கவை எதிர்கொள்வதற்கு ஜனநாயகசக்திகள் ஒன்றிணைய வேண்டும் என்ற கோரிக்கை வலுவத்துள்ளது. பா.ஜ. கவை எதிர்கொள்வதற்கு காங்கிரஸ் கட்சியுடன் கரம்கோக்க வேண்டும் என்று சீதாராம் யெச்சூரி தரப்பும், காங்கிரஸ் கட்சியுடன் கரம் கோக்கக் கூடாது என்று முன்னாள் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரத் தரப்பும் கூறிவருகின்றன. இந்தச் சூழலில் மாநாட்டினைத் தொடக்கி வைத்து சீதாராம் யெச்சூரி உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பா.ஜ.கவை எதிர்கொள்வதற்காக ஜனநாயக சக்திகள் ஒன்றிணைய வேண்டும். மக்கள் நலனுக்கான போராட்டங்கள் தீவிரப்படுத்தப்பட வேண்டும். அதற்காக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலிமை பெறுவதற்கு இந்த மாநாடு நிச்சயம் ஒரு புதிய வழியைக் காட்டும். பா.ஜ.கவின் மக்கள் நலனுக்கு எதிரான கொள்கைகளை எதிர்ப்பதற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே மாற்றாக இருக்கும்.

மத்தியில் ஆளும் பா.ஜ.க அரசு, ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளது. அந்த அமைப்பு, நாட்டின் ஒற்றுமைக்கு ஊறுவிளைவிக்கும் வகையில், முன்னெப்போதும் இல்லாத வகையில் மக்கள் மீது கொள்கைகளை திணிக்க முற்படுகிறது.

மேலும், பொருளாதார விவகாரங்களில், சர்தேச நாடுகளின் நெருக்கடிக்கு வேண்டுமென்றே மத்திய அரசு பணிந்து செல்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தொழில் முதலீட்டை ஈர்ப்பதில் தமிழகம் பின்னடைவு

## ஸ்டாலின் கண்டனம்

தொழில் முதலீட்டை ஈர்ப்பதில் தமிழகம் பின்னடைவைச் சந்தித்துள்ளமைக்கு தி.மு. க செயல்தலைவர் மு.க. ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

தொழில் தொடங்குவதற்காக முதலீட்டாளர்களை ஈர்ப்பதில் தமிழகம் வரலாறு காணாத சரிவைச் சந்தித்துள்ளது என மத்திய அரசின் ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது. இது, அ.தி. மு.க. அரசின் நிர்வாகத் திறமையின்மையைக் காட்டுவதாக உள்ளது.

2016 ஆம் ஆண்டு கிடைத்த முதலீட்டில் மூன்றில் ஒரு பங்கு முதலீட்டைக்கூட 2017 ஆம் ஆண்டில் பெறமுடியாமல் தொழில் வளர்ச்சி முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், இளைஞர்களின் வேலைவாய்ப்பும் மாநிலத்தின் முன்னேற்றமும் பெருமளவில் கேள்விக் குறியாகி உள்ளது.

தமிழகத்தில் பொறுப்புள்ள அரசு இல்லை என்ற செய்தி உலகம் முழுவதும் உள்ள முதலீட்டாளர்களைச் சென்றடைந்து விட்டது.

அதனால், முதலீட்டாளர்களை ஈர்க்க டுபாயில் சாலைக் கண்காட்சி நடத்துவதாலோ இரண்டாம் உலக முதலீட்டாளர் மாநாட்டைக் கூட்டுவதாலோ தமிழகத்தின் தொழில்துறைக்கு எவ்வித விமோசனமும் பிறக்கப் போவதில்லை.

எஞ்சியிருக்கும் நாள்களிலாவது முதல் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் போடப்பட்ட 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு செயல்வடிவம் கொடுக்கவும் புதிய முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் பொறுப்புள்ள நிர்வாகத்தையும் அ.தி. மு.க. அரசு அளிக்க வேண்டும்.

தமிழ்நாடு தொழில்துறையில் பின்தங்கி விட்டமையை மாற்றியமைக்க முதல்வர் முயற்சிக்க வேண்டும். அப்படிச் செய்ய முடியாவிட்டால் தானாகவே முன்வந்து பதவிவிலகவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## விக்கியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கூட்டமைப்புடன் கொள்கை ரீதியாக முரண்பட்டு வெளியேறும் முதலமைச்சர், கொள்கையில் உறுதியாகவுள்ளவர்களுடன் இணைந்து கூட்டு ஆரம்பிக்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ்த்தேசியகூட்டமைப்பின் உறுப்பினராகவும் அந்தக் கட்சியின் சார்பான முதலமைச்சராகவும்தான் விக்னேஸ்வரன் இயங்கி வருகிறார். தற்போது அவர் அந்தக் கட்சியிலிருந்து விலகி, புதிய கட்சியை ஆரம்பிக்கப் போகிறார் என்பது வரவேற்கத்தக்கது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து அவர் வெளியேறுகிறார் என்பது எங்களைப் பொறுத்தவரை முக்கியமானது. அதுவும் கூட்டமைப்பினருடன் முரண்பட்டு வெளியேறுகின்றமை மிக முக்கியமானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைதான் இன்று தமிழ்த் தேசியத்தின் சாபக்கேடாக மாறியிருக்கின்றனது.

அத்துடன், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆரம்பிக்கும் கட்சி எவ்வாறு இயங்கப் போகிறது என்பதும் முக்கியமானது. கூட்டமைப்பின் கொள்கையுடன் ஒன்றித்துப் பயணிக்க முடியாது எனக் குற்றஞ்சாட்டித்தான் அவர் இந்த முடிவை எடுத்தால், எதிர்காலத்தில் இயங்கப்போகின்ற தரப்புகள் யார் என்பதும் முக்கியம்.

தமிழ் மக்கள் பேரவையிலுள்ள மற்றொரு கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ்வுடன் இணைந்துகூட்டமைக்கதமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பேச்சு நடத்தியது. எனினும் கூட்டமைப்பின் கொள்கையை விட மோசமான கொள்கையுடைய தமிழர் விடுதலைக் கூட்டணி, சிறிரெலோ, ஈரோஸ் உள்ளிட்ட கட்சிகளுடன் ஈ.பி.ஆர்.எல்.எவ். இணைந்ததால் அந்த முயற்சியைக் கைவிட்டோம்.

எனவே முதலமைச்சர் விக்னேஸ்வரனாக இருந்தால்கூட கொள்கையுடன் உறுதியாக உள்ளதரப்புகளுடன்இணைந்து செயற்படவேண்டும் என்பது தான் எமது நிலைப்பாடு.

கொள்கையுடன் உறுதியாக இருக்கக் கூடிய - தமிழ் மக்கள் பேரவையில் உள்ள - பொது அமைப்புக்களின் உறுப்பினர்களைச்சேர்த்து கூட்டு ஒன்றை அமைத்து முதலமைச்சர் விக்னேஸ்வரன் இயங்குவாராக இருந்தால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அதில் இணைவதைச் சாதகமாகப் பரிசீலிக்கும்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் எப்படிப்பட்டவர்களுடன் எதிர்காலத்தில் இயங்கப் போகிறார்? அவரது புதிய கட்சி எந்த எந்தத் தரப்புகளுடன் கூட்டுச் சேரப்போகின்றது? ஆகிய கேள்விகளுக்குச் சரியான பதில் கிடைக்கவேண்டும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்றமாயைக்குள்இருந்துதமிழ் மக்கள் வெளியேறத் தொடங்கியுள்ளனர். அந்தக் கட்சியின் வாக்குவங்கியில் அரைவாசிக்கு மேல் கடந்த தேர்தலில் வீழ்ச்சி கண்டுள்ளது.

பலமான மாற்றுக்குச் சரியான அடித்தளத்தைநாம் போட்டிருக்கும் வேளையில்தான் முதலமைச்சரின் இந்த அறிவிப்பு - அவரது சிந்தனை - வந்துள்ளது. -என்றார்.

## ஆதரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட நாம் தயாராக உள்ளோம்.

- இவ்வாறு நேற்று அதிரடியாக அறிவித்தார் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் ஐயாத்துரை சிறிரங்கேஸ்வரன்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் முடிவுற்ற பின்னர் வாக்குகள் எண்ணும் பணிகள் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்போது வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானமும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் யாழ்ப்பாணத்திலுள்ள உள்ளூராட்சிச் சபைகளைக் கூட்டமைப்பு எடுத்துக்கொள்ளும் என்றும் தீவகத்திலுள்ள மூன்று சபைகளையும் எமக்கு விட்டுத்தருவார்கள் எனவும், வாக்குறுதிகளை வழங்கினார்கள்.

அத்துடன் கடந்த காலப் பகைமையை மறக்கவும் அவர்கள் கோரியிருந்தனர். சாவகச்சேரி நகர சபையில் எமது ஆதரவைப் பெற்ற பின்னர் மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும் இதையே கூறியிருந்தார். ஆனால் அதனையெல்லாம் மறந்துநாம் ரத்தம்சிந்திய தீவகப் பகுதிகளைக் கைப்பற்ற எமக்கு எதிராக அவர்கள் களமிறங்கினார்கள்.

அதற்காகக் கூட்டமைப்புடன் நாம் பகைமை காட்டப்போவதில்லை. மக்களுக்கான சேவைகளை ஆற்ற ஒத்துழைப்போம். -என்றார்.

ஈ.பி.டி.பியுடன் கூட்டமைப்பினர் எவரும் பேசவில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்த கருத்து தொடர்பில் அவரிடம் கேட்டபோது -

எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸின் தொலைபேசி மாதாந்தச் சிட்டையைக் காட்டத் தயார். வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன் எனப் பலர் பேசியிருந்தனர்.

ஒவ்வொருவரும் நாள்கணக்கில் மாறி மாறி பேசிக்கொண்டேயிருந்தனர். எமது உறுப்பினரான முடியப்பு ரெமீடியஸிடம், அவர் வீட்டுக்கேத் தான் தேடி நேரே வரவாவென சுமந்திரன் கேட்டார். அதற்கு ரெமீடியஸ் மறுத்துவிட்டார்.

எங்களிடமும் பலரும் தொடர்ந்தும் உதவி கேட்டுத் தொலைபேசி வழியே அழைத்தனர். செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் நாடாளுமன்றில் நேரடியாகவும் இவர்கள் உதவி கேட்டனர்.

கூட்டமைப்பினருக்குச் சபைகளைக் கைப்பற்ற நாம் தேவை. ஆனால் மக்களுக்கு ஈ.பி.டி.பியிடம் ஆதரவு கேட்டமை பற்றித் தெரியக்கூடாதென இரட்டை வேடம் போடுகிறார்கள் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

## சு.கவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதான செயற்பாட்டாளருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

புத்தாண்டில் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு பத்தரமுல்லையிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 15 அமைச்சர்களும், பிரதிச் சபாநாயகரும் ஆதரவாக வாக்களித்தனர்.

இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில், அந்தப் பதினாறு பேரும் பதவி விலக வேண்டும் என அழுத்தங்கள் அதிகரித்தன.

அதனைத் தொடர்ந்து நம்பிக்கை யில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த 16 பேரும் அரசில் வகித்த சகல பதவிகளிலிருந்தும் விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே அவர்களைத் தம்மோடு சேர்த்துக் கொள்வதாக பஸில் அறிவித்துள்ளார். (ஐ)

## ஹொரணையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பத்துக்கும் அதிகமானோர் மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர் எனபொலிஸார் தெரிவித்தனர்.

நச்சுவாயுவைச் சுவாசித்தமையினாலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்தத் தொழிற்சாலையில் அமோனியா சேரும் குழியைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவர் தவறுதலாக அதற்குள் விழுந்துவிட்டார்.

இதனை அறிந்து அயலவர்கள் ஒன்று கூடி அந்த ஊழியரை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அந்த நடவடிக்கையில் ஈடுபட்டவர்களும் பின்னர் மயங்கினர்.

இதனையடுத்து மீட்கப்பட்ட ஊழியரும் பாதிப்புற்ற அயலவர்களுமாக 16 பேர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு விரையப்பட்டனர்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் தொழிற்சாலையின் ஊழியரும் பிரதேசவாசிகள் நான்கு பேரும் உயிரிழந்துள்ளனர்.

ஏனையவர்கள் ஹொரணை வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட தொழிற்சாலையின் முகாமையாளர் இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (உ)

## எரிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டாடும் முகமாக பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பெற்றோலிய கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டும் நிறுவனமாகவோ அல்லது மக்களுக்கு மானியமுறையில் சலுகை வழங்கும் நிறுவனமாகவோ இருக்க எந்த அரசாங்கமும் தீர்மானம் எடுக்கவில்லை.

ஆனால் இது தொடர்பாக அரசாங்கம் விரைவாக ஒரு தீர்மானத்தை எடுக்கவேண்டும். இன்று எல்லோரும் எரிபொருள் விலை கூடுமா, இல்லையா என அதிகம் பேசுகின்றனர்.

நிதிஅமைச்சுஅதிகாரிகளும் இது தொடர்பாக எம்முடன் கலந்துடையாடிவருகின்றனர். எனினும் விலை மாற்றம் தொடர்பாக அரசாங்கமே தீர்மானம் எடுக்கும்.

இது தொடர்பாக அமைச்சரவை, பிரதமர் மற்றும் ஜனதிபதியே முக்கிய முடிவை எடுப்பர். - என அமைச்சர் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக தமிழீழத் தேசத்தினுள் நுழைந்த இந்திய இராணுவம், இங்கு விடுதலைப் புலிகளுடன் நேரடி இராணுவச் சமரை ஆரம்பித்தது.

இதனை ஆட்சேபித்து 1988 ஆம் ஆண்டுமார்ச் மாதம் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.45 மணிக்கு மட்டக் களப்பு அமிர்த கழி சிறி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின்முன்றிலில்உள்ளகுருந்த மரநிழலின் கீழ்அன்னை பூபதி தனது சாகும் வரையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி தனது சாகும் வரையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்த அன்னை பூபதியின் இறுதி மூச்சு தமிழீழக் காற்றோடு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8.45 மணியளவில் கலந்து பரவியது.

தியாக தீபம் அன்னை பூபதியின் 30ஆம் ஆண்டுநினைவேந்தல் நிகழ்வு தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வு பல்கலைக்கழக வளாகத்தில் நேற்றுப் பிற்பகல் கடைப்பிடிக்கப்பட்டது. பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் முதன்மைச் சுடரேற்றினார். மாணவர் ஒன்றியத் தலைவர் உள்ளிட்டவர்களும்சுடரேற்றினர். அன்னை பூபதியின் உருவப் படத்துக்கு மாணவர்கள் உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தினர். (ஐ-7)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை முரண்பாடு ஏற்பட்டது.

மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராக தெய்வேந்திரனை நியமிக்க வலியுறுத்தி மாகாணக் கல்வி அமைச்சரும் பதில் முதலமைச்சருமான சர்வேஸ்வரன் பிடிவாதமாக உள்ளார். இதனால் நேற்று இடம்பெறவிருந்த செயலாளர்கள் மாற்றம் ஆளுநரால் ஒத்திவைக்கப் பட்டது.

வடக்கு மாகாணச் செயலாளர்கள் நியமனம் தொடர்பில் மாகாண ஆளுநரும் பதில் முதலமைச்சரும் நேற்றுக் காலை சந்தித்தனர்.

இதன்போது, மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளராக பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின்செயலாளர்சி.ஏ.மோகன்றாஸ் மாற்றப்படுகின்றமையுடன், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராகப் பயிற்சி முகாமைத்துவத் துக்குப் பொறுப்பாகவிருக்கும் சிவபாதசுந்தரமும், பயிற்சி முகாமைத்துவத்துக்குப் பொறுப்பாக தெய்வேந்திரனும் நியமிக்கப்படுவார் என்று ஆளுநரால் பதில் முதலமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நியமனத்தை ஏற்க மறுத்த பதில் முதலமைச்சர், தம்மால் பரிந்துரைக்கப்படுபவர்களை மட்டுமேசெயலாளர்களாக நியமிக்க முடியும் என முரண்பட்டார். அத்துடன், இந்தியாவில் இருக்கும் முதலமைச்சருடன் தொடர்பு கொண்டு இந்த நியமனங்கள் தொடர்பில் சர்வேஸ்வரன் பேசினார்.

கல்வி அமைச்சின் செயலாளராகத் தெய்வேந்திரன் நியமிக்கப்படாவிடின், அனைத்து நியமனங்களையும் உடன் நிறுத்துமாறு முதலமைச்சர் தொலைபேசியிலேயே கேட்டுக்கொண்டார் எனக் கூறப்பட்டது. அதனையடுத்து ஆளுநரால் நேற்று வழங்கப்படவிருந்த செயலாளர் மாற்றங்களை நிறுத்திவைக்குமாறு பதில் முதலமைச்சர் கேட்டுக்கொண்டார். அதனால் மாற்றல் கடிதங்களை வழங்குவதை ஆளுநர் பிற்போட்டார்.

இதேவேளை, தெய்வேந்திரனுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்து ஆளுநரின் பணிப்பில் அவர் அதிகாரங்கள் அற்ற பதவி நிலையில் தற்போது உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-7)

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் தமிழ்த் தேசிய மே நாள் நிகழ்வுகள் இம் முறை முழங்காவிலில் எழுச்சியாக இடம்பெறவுள்ளன. முழங்காவில் விநாயகர் விளையாட்டு மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் இடம்பெறும்.

- இவ்வாறு அந்தக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அறிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவரது ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளவை வருமாறு:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசிய மே - நாள் நிகழ்வுகள் எதிர்வரும் மே முதலாம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு நாச்சிக்குடாச் சந்தியில் இருந்து ஊர்திபவனிகளுடன் ஆரம்பமாகி எழுச்சிப் பேரணி பிரதான வீதி வழியாக நகர்ந்து முழங்காவில் விநாயகர் விளையாட்டு மைதானத்தைச்சென்றடைந்து அங்கு சிறப்பாக ஒழுங்கமைக் கப்பட்ட இடத்தில் மாபெரும் மே தினக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரது சிறப்புரைகளும் இடம்பெறவுள்ளன.

1990ஆம் ஆண்டு இடம் பெயர்ந்தநிலையில் 28 வருடங்களாக தமது சொந்த இடத்துக்குப் போவதற்காகக் காத்திருந்து தற்போது போராடி வரும் மக்களது வாழ்வுரிமை, தொழிலுரிமையை வலியுறுத்தியும், தமது உறவுகளை தமது கண் முன்னே இலங்கை இராணுவமும் அதனது துணைப் படைகளும் பிடித்துச்சென்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை அரசு விடுவிக்க வேண்டி ஒரு வருடத்திற்கும் மேலாக வீதிகளில் இரவு பகலாகப் போராடி வரும்அவர்களது உறவுகளுக்கு நீதியை வலியுறுத்தியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்டத்துக்கான தமிழ்த் தேசிய மே நாள் நிகழ்வுகள்எழுச்சியாக முழங்காவிலில் இடம்பெறவுள்ளன.

தமிழ் தேசிய மே நாள் நிகழ்வுகள்தொடர்பான முன்னாயத்த ஏற்பாட்டுக்கூட்டம் கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக் காரியாலயமான அறிவகத்தில் நேற்றுமுன்தினம் மாலை 3.30 மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான த.குருகுலராசா, சு.பசுபதிப்பிள்ளை மற்றும் கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உபதவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சியின் பிரதேச, வட்டார அமைப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு தமிழ் தேசிய மே நாள் நிகழ்வுகளை சிறப்புற எழுச்சியாக நடத்துவது தொடர்பான ஆக்கபூர்வமான தமதுகருத்துக்களைமுன்வைத்தனர். முழங்காவில் பிரதேச அமைப்பாளர் யோ.தனராஜ் தலைமையிலான மே நாள் ஏற்பாட்டுக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது - என்றுள்ளது. (ஐ)

# புனேக்கு படையெடுத்த சென்னை ரசிகர்கள்



சென்னை சுப்பர் கிங்ஸ் பங்கு பற்றும் ஐ.பி.எல். போட்டியைப் பார்வையிடுவதற்காக சென்னை சுப்பர் கிங்ஸ் ரசிகர்கள் 1000 பேர் சிறப்பு ரயிலில் புனே நோக்கி படையெடுத்துள்ளனர்.

இந்தியாவில் 10 ஆவது தடவையாக இடம்பெற்றுவரும் ஐ.பி.எல். போட்டியில் 7 போட்டிகள் சென்னையில் இடம்பெறவிருந்தன. ஆனால் கடந்த 7ஆம் திகதி மும்பை இந்தியன்ஸ் அணிக்கும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கும் இடையிலான போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இடம்பெற்றது.

அப்போது, சென்னையில் காவிரி மேலாண்மை தொடர்பில் போராட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்தமையினால் சென்னையில் ஐ.பி.எல் போட்டிகளை நடத்தக்கூடாதென பலர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்நிலையில் அதனை மீறி ஐ.பி.எல். நிர்வாகம் சென்னையில் போட்டியை நடத்தியது. அப்போட்டியின் போது போராட்டக்காரர்கள் செருப்புகளை வீசியும் கோஷங்களை எழுப்பியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து மிகுந்த பாதிப்புக்குள்ளான ஐ.பி.எல் நிர்வாகம் சென்னையில் நடக்கவிருந்த மிகுதி 6 போட்டிகளையும் புனேக்கு இடம்மாற்றியது.

இதனை தொடர்ந்து சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கும் இடையிலான போட்டி இன்று புனேயில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டியை பார்வையிடுவதற்காக சென்னை சுப்பர் கிங்ஸ் ரசிகர்கள் 1000 பேர் விசேட ரயில் மூலம் நேற்றுக் காலை சென்னை மத்திய ரயில் நிலையத்தில் இருந்து புறப்பட்டனர்.

தமிழ் நாடு கிரிக்கெட் சங்கமும் சென்னை அணி ரசிகர்கள் மன்றமும் இந்த சிறப்பு ரயிலில் சேவையை ஏற்பாடு செய்துள்ளது. இதன்போது சென்னை ரசிகர்கள் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் ஜேர்சியை அணிந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வருந்துகிறார் பாண்டியா

பெங்களூர் அணிக்கு எதிரான ஆட்டத்தில் தான் தூக்கி எறிந்த பந்து, எதிர்பாராதவிதமாக விக்கெட் காப்பாளர் இஷான் கிஷனின் முகத்தில் பட்டு காயம் ஏற்பட்டதற்கு, தனது ட்விட்டர் பக்கத்தில் மும்பை வீரர் ஹர்திக் பாண்டியா வருத்தம் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல் கிரிக்கெட்டில் பெங்களூர் அணிக்கு எதிரான ஆட்டத்தில், பீல்டிங் செய்து கொண்டிருந்த ஹர்திக் பாண்டியா தூக்கி எறிந்த பந்து, எதிர்பாராதவிதமாக மும்பை விக்கெட் காப்பாளர் இஷான் கிஷனின் முகத்தைப் பதம் பார்த்தது.



கிஷனின் வலது கண் அருகில் பந்து தாக்கியதில் அந்த இடம் சிவந்து போனது. அதன் பிறகு, வலியால் துடித்த இஷான் கிஷனுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

பின்னர், அவர் களத்தை விட்டு வெளியேறினார். இச்சம்பவம் குறித்து வருத்தம் தெரிவித்துள்ள ஹர்திக் பாண்டியா, தனது ட்விட்டர் பக்கத்தில் 'மன்னித்து விடுங்கள். வலுவாக வருவீர்கள்'என இஷான் கிஷனை குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், இதுகுறித்து மும்பை அணித் தலைவர் ரோஹித் ஷர்மா கூறுகையில், 'இஷான் கிஷனின் காயம் பயப்படும்படி இருப்பது போல் தோன்றவில்லை. மும்பை அணியின் அடுத்த ஆட்டத்திற்கு 3-4 நாள்கள் உள்ளன. அதற்குள் அவர் சரியாகிவிடுவார் என்று நம்புகிறேன்' என தெரிவித்துள்ளார்.

## ஏன் அப்படி நடந்தேன்? பிரித்தி ஜிந்தா உருக்கம்

பஞ்சாப் அணியின் வெற்றிக்கு பின் மைதானத்தில் இருந்த சிறுமிகளை காப்பாற்றவேண்டும் என்ற நோக்கத்தின் காரணமாகவே நான் அப்படிச்செயல்பட்டதாக பிரித்தி ஜிந்தா கூறியுள்ளார்.



ஐபிஎல் தொடரின் 12ஆவது லீக் போட்டியில் சென்னை அணிக்கெதிரான போட்டியின்போது பஞ்சாப் அணி 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

டோனி களத்தில் இருந்த போதும் பஞ்சாப் அணி வெற்றி பெற்றதால் அதன் உரிமையாளரான பிரித்தி ஜிந்தா அந்த வெற்றியை வெளிப்படுத்தியே ஆகவேண்டும் என்று பஞ்சாப் அணியின் சீருடைகளை எடுத்து, ரசிகர்களுக்கு விநியோகித்து கொண்டிருந்தார்.

அப்போது திடீரென்று என்ன நடந்தது என்று தெரியவில்லை, பிரீத்தி உடனடியாக அங்கிருந்தவர்களை நோக்கிக் கோபமாகப் பேசியதுடன், அந்த இடத்தை விட்டுநகர்ந்து சென்று, அதன் பின் மீண்டும் வந்து சீருடைகளை ரசிகர்களுக்குக் கொடுத்தார்.

பிரித்தி ஜிந்தாவின் இந்த வீடியோ சமூகவலைத்தளங்களில் வைரலானதால், அவர் பெரும் சர்ச்சையில் சிக்கினார்.

இந்நிலையில் அவர் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில், இரண்டு சிறுமிகள் கூட்ட நெரிசலில் சிக்கி கொண்டார்கள்.


அவர்களைக் காப்பாற்றவேண்டும் என்ற நோக்கத்தில், சற்று நகர்ந்து கொள்ளும்படி ரசிகர்களை நோக்கி கூறினேன்.

அந்தச் சிறுமிகள் சுவாசிக்க இடைவெளி அளிக்கும்படி அவர்களிடம் கேட்டுக்கொண்டேன் ஆனால் அதற்கு அவர்கள் ஒத்துழைக்காததன் காரணமாகவே அப்படி நடந்து கொண்டார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

## உதைபந்துப் போட்டியை ஆரம்பித்து வைத்தது கரடி

ரஷ்யாவில் உள்ளூர் லீக் உதைபந்தாட்டப் போட்டியை கரடி தொடங்கி வைத்ததற்கு, விலங்கு நல ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

ரஷ்யாவில் உலகக் கிண்ண கால்பந்து போட்டிகள் இந்த ஆண்டு நடைபெற உள்ளது. இந்நிலையில், மூன்றாவது பிரிவு லீக் உதைபந்தாட்டப் போட்டியில் மாசுக் கே.எம்.வி. மற்றும் அங்குஸ்ற் அணிகள் மோதின. இந்த போட்டி தொடங்குவதற்கு முன்பாக, ரஷ்ய நாட்டின்



அடையாளமாக உள்ள கரடி ஒன்று போட்டி மைதானத்திற்கு வரவழைக்கப்பட்டது.

வீஷ்து எனும் பெயருடைய அந்த கரடி போட்டியை தொடங்கி வைக்கும் வகையில், உதைபந்தை நடுவரிடம் வழங்கியது. மேலும், கைதட்டி மகிழ்ந்தது. இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இந் நிலையில், கரடி போட்டியைத் தொடங்கி வைத்ததற்கு விலங்குகள் நல ஆர்வலர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

## உலகக் கிண்ணத்துக்கு முன் குணமாகித் திரும்புவேன்

ரஷ்யாவில் நடைபெற உள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்குள் முழுமையாகத் தயாராகி விடுவேன் என, பிரேசில் அணி வீரர் நெய்மர் தெரிவித்துள்ளார்.

பிரேசில் உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர் நெய்மர், கடந்த பெப்ரவரி மாதம் கழகப் போட்டி ஒன்றில் விளையாடியபோது காயமடைந்தார். இதனைத் தொடர்ந்து, அவருக்கு காலில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது காயத்திலிருந்து குணமடைந்து வரும் நெய்மர் கூறுகையில், 'காயம் மோசமானது தான். ஆனால், தற்போது ஓய்வு எடுத்து வருவதால் தேறி வருகிறேன். ரஷ்யாவில் ஜூன் மாதம் தொடங்கும் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிக்குள் நான் முழுமையாக தயாராகி விடுவேன்'என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், எதிர்வரும் மே 21ஆம் திகதி தொடங்கும் தேசிய அணிக்கான பயிற்சி முகாமில் நெய்மர் பங்கேற்பார் என கூறப்படுகிறது. நெய்மர் பாரீஸ் செயின்ட் ஜேர்மைன் எனும் அணிக்காக விளையாடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)






## வெறுப்படைந்த ரசிகர்கள்

உடன்கட்டை ரூ. 11.5 கோடிக்கும், இங்கிலாந்து அணியின் சகல துறை வீரரான பென் ஸ்டோக்ஸை ரூ.12.5 கோடிக்கும் ஏலம் எடுத்தமை குறித்து ரசிகர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்,

ஐ.பி.எல். ஆரம்பத்தில் இருந்தே உடன்கட்டின் பந்து வீச்சு அந்தளவிற்கு இல்லை, அதே போன்று சென்ற ஆண்டு புனே அணிக்காக ஆரம்பத்தில் இருந்தே அதிரடி காட்டிய பென் ஸ்டோக்ஸ் இந்தாண்டு இன்னும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவே இல்லை.

நேற்று முன்தினம் போட்டியில் பென்ஸ்டோக்ஸ் 11 பந்துக்கு 14 ஓட்டங்கள் எடுத்தமையுடன், 3 ஓவர் வீசி 25 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்து விக்கெட் எதுவும் வீழ்த்தாமல் ஏமாற்றினார்.

அதே போன்று நேற்றுமுன் தினம் போட்டியில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட உடன்கட் 3 ஓவர் வீசி 34 ஓட்டங்களை வாரி வழங்கினார்.

இதனால் ரசிகர்கள் ராஜஸ்தான் அணியில் துடுப்பாட்ட வரிசை ஓர் சரியில்லை, பந்து வீச்சில் ஒன்றும் இல்லை, தென்னாபிரிக்கா வீரரான ஹென்றிக் கிளசினை ஏன் எடுத்தீர்கள், அவரை விளையாட வைக்க வேண்டியது தானே என்று கடும் கோபத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். (ஐ)

# குழந்தை மருத்துவ நிபுணரை உடனே நியமிக்கவேண்டும்!

## தெல்லிப்பளை வைத்தியசாலை முன் போராட்டம்






**(எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், ஏப்.20

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் குழந்தை மருத்துவ நிபுணரை நியமிக்கக் கோரி பிரதேச கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து வைத்தியசாலை முன்பாகக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நேற்றுக் காலை முன்னெடுத்தனர்.

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் அதிகமான கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனினும் வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து குழந்தை மருத்துவ நிபுணர் நியமிக்கப்படவில்லை.

இந்த நிலையில் 10 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் இறந்துள்ளன. இதனால் குழந்தைகளை இழந்த தாய்மார்கள் மன அழுத் தத்தால் மனநலம் பாதிக்கப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இந்த நிலையிலேயே மேற்படி போராட்டத்தைக் கர்ப்பிணித் தாய்மார்கள் இணைந்து நேற்று முன்னெடுத்தனர். (ஐ-7)









'டான்' தொலைக்காட்சியின் ஏற்பாட்டில் 7 ஆவது வருடமாக நடைபெறும் 'புதிய விடியல்' வடக்கின் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாவது கால் இறுதியாட்டம் நேற்று இரவு யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் மின்னொளியில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

'காலைக்கதிர்' நாளிதழ், ரொப்பாஸ், ரொப்பாஸ் மால் ஆகியவற்றின் அனுசரணையுடனும், சரவணா அச்சகம், BEES SPORTS ஆகியவற்றின் இணை அனுசரணையுடனும் இந்தச் சுற்றுப் போட்டி நடைபெறுகிறது.

நேற்றைய கால் இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை குருநகர் பாடும் மீன் வி.க. அணி 9-1 என்ற கணக்கில் வீழ்த்தி அரையிறுதிக்குத் தெரிவானது.

# நம்பிக்கையில்லாப் பிரேரணை சம்பந்தனுக்கு எதிராக வராது!

## இப்படி நம்புகிறார் கூட்டு எதிரணியின் வாசுதேவ





கொழும்பு ஏப்.20

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி எடுக்கும் எனத் தாம் நம்பவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி கூட்டு எதிரணிக்கே வழங்கப்பட வேண்டும் என்பதில் தாங்கள் உறுதியாகவே இருக்கிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

கூட்டு எதிரணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஜனநாயக இடதுசாரி முன்னணி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நடைபெற்றது.

இச் சந்திப்பிலேயே அவர் மேற்படி விடயத்தைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றைக் கொண்டு வரவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி தெரிவித்து வருவது தொடர்பாக இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார கருத்து வெளியிட்டார்.

அப்படியொரு தீர்மானத்தை எமது கட்சி எடுக்கவில்லை. அது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், கூட்டு எதிரணி இப்படியொரு தீர்மானம் ஒன்றை எடுக்கும் என்று நான் நினைக்கமாட்டேன். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமக்கே வழங்கப்பட வேண்டும் என்பதை கூட்டு எதிரணி தெரிவித்து வருகின்றது.

இன்று அரசாங்கம் சம்பந்தனைக் கைக் கூலியாகப் பயன்படுத்தவே எதிர்க்கட்சித் தலைவர் பதவியை அவருக்கு வழங்கியிருக்கிறது. மற்றொரு கைக் கூலியாக ஜே.வி.பிக்கு எதிர்க்கட்சிப் பிரதம கொறடா பதவியை அரசாங்கம் வழங்கியுள்ளது. ஆகவே நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கான நேரத்தில் 53 பேர் இருக்கின்ற கூட்டு எதிரணிக்கு சொற்ப அவகாசமே வழங்கப்படுகின்றது. அதேவேளை 6 பேர் கொண்ட ஜே.வி.பியினருக்கு அதிக நேரம் ஒதுக்கப்படுகின்றது. - என்றார்.

அரசாங்கத்தை மாற்றுவதற்கு அடுத்த பொதுத் தேர்தல் நடத்தப்படும் வரை காத்திருக்காது உடனடியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளில் ஏற்பட்ட அரசியல் பூகம்பத்திற்குப் பின்னால் நாட்டில் அரசியல் மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற கருத்து பரவிவருகின்ற நிலையில், மிக விரைவில் அது நடைபெற வேண்டும். அடுத்த பொதுத் தேர்தல் வரை தற்போதைய அரசாங்கம் ஆட்சியில் இருப்பது கூட்டு எதிரணிக்குச் சாதகமாக அமையும் எனச் சிலர் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

எனினும் அதுவரை காத்திருக்காது மக்களுக்காக தற்போதைய அரசாங்கத்தை கவிழ்க்க வேண்டும். மேலும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பன கொண்டு வரும் யோசனைகள் குறித்து கவனமாக செயற்பட வேண்டும். - என்று அவர் மேலும் தெரிவித்தார்.









பொதுநலவாய அமைப்பு நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக லண்டனுக்கு வருகை தந்திருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக லண்டனில் கிறீன் பார்க்கில் நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு ஈழத் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். அப்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பொது நலவாய இராஜியத் தலைவர்கள் மாநாட்டில் லண்டன் நேரப்படி நேற்று மாலை 4 மணிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்ற விருந்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.04.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.